

சிலம்பு உரு } திருவள்ளுவர் ஆண்டு ஈஈஅக, மார்கழி சனவரி, 1951 { பரல் நு

ஆண்மைச் சர்தார்

[சித்தாந்த பண்டிதர், புலவர், ப. இராமநாத பிள்ளை]

சிறப்பு

அடிகள் அளித்துள்ள ஆண்மைச் சிறப்புப் பெயரே 'சர்தார்'. சர்தார் என்பது தலைவன் எனப் பொருள்படும். இப்பெயர் ஏறத்தாழப் 'பெருஞ்செய் ஆடவர்' என்னும் பீடு டைப் பெரும் பெயர்க்கு ஒப்பாகும். குஜராத் மாகாணத்தில் 'மறமானம்' மிக்க மள்ளர்கள் வாழும் கோட்டம் நாடியாத் தாலுகா. இதைச்சார்ந்த எழில்மிகும் ஊர் கரம்சாத். இவ்வூரில் வேளாண் (விவசாய) விழுக்குடியில் தாளாண்மையும் வாளாண் மையும் ஒருங்கமைந்து விறல் கொண்டு திறல் மிகுத்து வாழும் திருவினர் ஜாவேரிபாய் படேல்.

தந்தை

இவர், ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத் தேழில் நிகழ்ந்த அறநெறி நில்லா ஆங்கில அரக்கர்களை மறமுடன் எதிர்த்துப் பொருத அரசியார் ஜான்வி அம்மையாரின் மாபெரும் படை யில் சேர்ந்து மைந்துடன் பொருது வென்ற மாண்பினர். ஆயி னும், ஓர் ஏழை வேளாண் வாழ்க்கையராகவே வாழ்ந்தனர். இவர்தம் தவப்பேற்றால் ஆண்மக்கள் ஐவரும், பெண்மகள் ஒருத்தியும் தோன்றினர். அவர்கள் முறையே சோமாபாய், நர்ஸிபாய், வித்தல்பாய், வல்லபபாய், காசிபாய் எனவும் தகி பென் எனவும் பிள்ளைத் திருப்பெயர் பெற்றனர். பெண்மகவு குறுவாழ்நாளாய் மண்ணுலகை நீத்தது. படேல் என்னும் சொற்பொருள் பட்டோலைகொண்டு ஊர்க்கணக்கு எழுதும் சீர்மிக்கோர் பெறும் பட்டப் பெயர் என்ப.

பிறப்பு

வல்லபபாய் படேல் ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து ஐந்தாம் (1875) ஆண்டு அக்டோபர்த்திங்கள் முப்பதோராம் நாள் பிறந்தனர். பெயருக்கு ஏற்பத் தோற்றமும் செய்கையும் காணப் பெற்றனர். அஞ்சாமையும் துணிவுமு, அன்பும் அறமும் நிரம்பிய பெற்றோர்களால் வளர்க்கப் பெற்றனர். தந்தையார் போர் முனையில் தாம் இயற்றிய 'மறனிழுக்கா மானமுடைய' வரலாறுகளை இளமையிலேயே விளக்கிக் கூறினர். இவற்றைக் கூர்ந்து கேட்டு மனத்தில் பதித்து மகிழ்வர் சர்தார். தாமும் ஒருநாள் ஆண்மை வீரராய் ஆகவேண்டு மென்று விழைவர். அயலாரை எதிர்த்துப் போர் புரிந்து சிறும் சிறப்பும் எய்த வேண்டு மென்று எண்ணுவர்.

படிப்பு

இளம் பருவத்தே சர்தாரின் அஞ்சாமை கண்டு ஆசிரியரும் அஞ்சினர். மன உறுதியைக்கண்டு அறிவு சான்ற ஆன்றவரும் வியந்தனர். ஒழுங்கும், கட்டுப்பாடும், சொல்வன்மையும், அமைதியும், ஒற்றுமை ஆக்கும் நற்றிறனும் கண்டு யாரும் மகிழ்ந்தனர். இவற்றை விளக்க வரலாறுகள் பல; சிலவற்றை ஈண்டு காண்பாம். இளமையில் வல்லபபாய்க்குக் கையில் புண் உண்டாகி இருந்தது. பலவகைமருந்து கட்டினர்கள்; ஒன்றும் பயன்தரவில்லை. பெரிதாகிக்கொண்டே வந்தது. ஒருவன் சூடு போட்டால் குணமாகும் எனக் கூறினன் அதற்காம் இடத்தையும் அறிவித்தனன்; துணைச் சென்று இடத்தையும் காட்டினன். சூட்டு மருத்துவர் இருப்புக் கம்பியைப் பழுக்கக் காய்ச்சிச் சூடுபோடத் துவங்கினர் பிள்ளையின் இளமை நோக்கித் தவங்கினர். சர்தார் துணிவுடன் அவர்கையினின்றும் சூட்டுக் கோலை வாங்கித் தன்கைப் புண்ணின்மேல் வைத்தனர். அப்பொழுது அச்சமோ துன்பமோ ஒரு சிறிதும் கொண்டிலர்.

மேற்படிப்புக்காக வல்லபபாய் ஒரு சிற்றூருக்குச் சென்றனர். ஆங்கு ஆசிரியர் வீட்டிலேயே கலவி உடை உணவு தங்குதல் எல்லாம் ஒருங்கு ஏற்பட்டன. இவ்வண்ணமே பலவூரிலிருந்து வந்த பல மாணவர் இருந்தனர். ஒருநாள் ஆசிரியரின் மனைவியார் வழக்கமபோல் எல்லார்க்கும் பால் கொடுத்தனர். ஆனால் வல்லபபாய்க்குப் பால் இல்லாமல் போயிற்று. ஆசிரியன் வாக்ஜிபாய் அதன் காரணத்தை வினவினன். அவ்வம்மையார் விளையாட்டாக வல்லபபாய்க்குப் பால் அதிகம் கொள்வதில்லை என்றனர். அன்றுமுதல் பாலை வெறுத்தனர்; மறுத்தனர். ஆசிரியரும் அம்மையாரும் எவ்வளவு முயன்றும் பயன்பெறவில்லை. இஃது அவர்தம் உறுதிக்கு இறுதியில்லை என்பதைக் குறிக்கும்.

முறை நிறுத்தல்

சர்தார் படிப்பின்பொருட்டுப் பல பள்ளிக்கூடங்கள் சென்றனர். ஆசிரியர்களின் முறையின்மையின்பொருட்டும் பல பள்ளிக்கூடம் மாற நேர்ந்தது. ஒருமுறை நாடியாத் என்னும் ஊரில் படித்துக்கொண்டிருந்தனர். அவர் படித்துக் கொண்டிருந்த வகுப்பாசிரியர் பிள்ளைகளுக்குப் பொத்தகம் ஈயக்கோல் இவைகளை வாங்கிவிற்று வணிகம் செய்துகொண் டிருந்தார். வல்லபபாய் கடையில் குறிப்புச்சுவடி ஒன்றை வாங்கி னர். ஆசிரியர் கடிந்துகொண்டனர். பள்ளிச்சட்டம் தெரியுமா? என்று வினவினர். ஆசிரியரே வெளியில் வாங்குவது குற்றம் எனக் கூறினர் வல்லபபாய், "அடிகளே! (குருஜீ) தாங்கள் பள்ளிக்கூடத்தில் வணிகம் செய்வதை விட்டுவிடுங்கள்; எங்க ளுக்குப் பாடத்தை உன்னித்து நன்முகச் சொல்லிக்கொடுங்கள்," என்றனர். ஆசிரியரின் கடுஞ்சினத்தால் சர்தாரின் முறை தவிராத உரையால் எல்லா மாணவரும் ஒருங்கு சேர்ந்து ஆறுநாட்கள் பள் ளிக்கூடம் வரவில்லை ஆசிரியர் தம் தவறு உணர்ந்த பின்னரே மாணவர்கள் பள்ளிக்கூடம் வந்தனர்.

மற்றொரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் மிரட்டினால் சர்தார் அடங்கிவிடுவார் என்று வீண் மிரட்டு மிரட்டினர். அம்மட்டோ, சர்தாரின் தோழன் என்ற காரணம் ஒன்றே கொண்டு ஒரு மாணவனைக் காலால் உதைத்தனர். இது சர்தாருக்குப் பொறுக்க லாகாப் பெரும் துன்பமாக ஆயிற்று. தம் சொல்வன்மையால் எல்லா மாணவர்களையும் உடனழைத்துக்கொண்டு வெளி ஏறினர். நெடுநாள் பள்ளிக்கூடம் நடக்கவில்லை. கல்வி மூதன்மையர் வந்து சர்தார் முன் அறிவித்ததுபோல ஆசிரிய ரைக்கொண்டு 'எற்றென் றிரங்குவ செய்தேனே' என்னும் வருத்தமொழி புகலச் செய்தனர். சர்தாரும் இரங்கி மாணவர் களுடன் பள்ளி வந்தனர்.

மன்முடியார்

ஒருவாறு பல்கலை நுழைவுத் தேர்வு (Matriculation) தேர்வில் தேறினர். வழக்கறிஞர் தேர்வுக்குப் படித்துத் தேறினர்; வழக்கறிஞர் ஆயினர். மன்முடியார் என்பதே வழக்கறிஞரென வழங்கப்படுகின்றது. "பழையமன் முடி போலும்," என்னும் சேக்கிழாரடிகள் திருவாய்மொழியும் இதனை வலியுறுத்தும். இயல்பாகவே மிடுக்கும், துடுக்கும், அளவையும், அஞ்சாமையும் மிக்குள்ள சர்தார்க்கு முறைமன்ற வழக்கு மிகுதியும் உளங் கொள்வதில்லை. மிறைமன்ற வழக்கே மிகுதியும் உளங்கவர்வது. அதனால், அத்துறையிலேயே பெரிதும் உவந்தழைத்தனர்.

முறைமன்றம் (Civil Court) மிறைமன்றம் (Criminal Court) என வழங்குகின்றன. மிறைமன்ற வழக்குகளிலும் எதிர் வழக்காளிகளின் சார்பே விரும்புவர். அவ்வழக்கைப் பலரும் வியக்க விளக்கி வெல்லுவர். ஆட்சியினர் செய்வதறியாது திகைத்து அடங்குவர். மெய்வழக்கல்லாப் பொய்வழக்கைக் காதால் கேட்பது, கண்ணால் காண்பது, கையால் தீண்டுவதும் செய்யார்.

மன்றம் மாற்றம்

சர்தார்க்கு அஞ்சிப் போர்சாத்திலிருந்த மன்றத்தலைவர் (Magistrate) தம் மன்றத்தை ஆனந்திற்கு மாற்றிக்கொண்டார். சர்தாரும் அவ்வூர்க்கே குடியிருக்கக் கருதினர். இதனை யுணர்ந்த தலைவர் மன்றத்தைப் பழைய இடத்துக்கே மாற்றிக்கொண்டனர்.

நடுங்குவித்தல்

ஒருகால் வெள்ளை மிறைநடுவர் (மாஜிஸ்டிரேட்) முன் கொலைவழக்கின் சார்பாக வழக்காட நேர்ந்தது. அவ்வெள்ளையன் பாடறிந்தொழுகும் பண்பினன் அல்லன். மேலும், எள்ளி நகூஉம் இயல்பினன். அதனால், இவர் ஆங்குச் செல்வது தகாது எனப் பலரும் வற்புறுத்தினர். இவர் பொருட்படுத்தாது சென்றனர். வழக்கு ஊர்காவலரால் படைத்துக் கட்டிய கட்டு. ஒரு செல்வமகந்து (திருமடத் தலைவர்) வேலைக்காரப் பெண்ணைக் கற்பழித்துக், கொன்று கிணற்றில் தள்ளினர் என்பது. எழு மணியகாரர்களும் ஒன்றுபோல் பொய்க்கரி (சாட்சி) புகன்றனர். எட்டாவதாக வந்த அவ்வூர் மணியகாரர் சான்று பகரும்போது நடுவர் மன்றத்து நிலைக்கண்ணுடி ஒன்று நிறுவி அதைப் பார்த்துக் கொண்டே சான்று பகரச் செய்தனர். இதுகாறும் 'ஊக்க முடையான் ஒடுக்கம்' ஒத்திருந்த சர்தார் குறுக்கு உசாவல் (கேள்வி) தொடங்கினர். நடுவர், இவரை மட்டும் ஏன் உசாவ வேண்டும் என வினவினர். தம் விருப்பம் என்றனர். சான்று பகர்ந்தவரை நோக்கி, நடுவர் ஆணைப்படி கண்ணுடியைப் பார்த்துத்தானே கரி போக்கினர்? ஆம்; இதை மேல் மன்றத்தும் மெய்ம்மையுறக் கூறுவீரன்றே? ஆம், என்றனர்.

நடுவர் நடுங்கித் தம் எண்ணத்தை மாற்றிச் சான்றுகளெல்லாம் நிறைவுறும் நிலையில் இல்லை என வரைந்து, எதிரியையும் பிணைமேல் விடுத்து வழக்கை மேல்மன்றத்துக்குப் போக்கினர். ஆங்கு எல்லாரும் வழுவினின்று நழுவி ஏறுத்தல் பெறுது தப்பினற் போதுமென்று மன்றுடினர். நடுவர் வேண்டுகோளின் மேல் அமைந்தாங்கொழுக இணங்கினர். அவ்வமைவுப் (சமாதானம்)படி மகந்துவும் விடுதலையாயினர். அரசியல் முதன்மை

யரும் அச்சமகன்று தப்பினர். அதுழுதல் படேடல் என்றல் கணவிலும் பொய்யர்க்கு உள்ளமும் உடலும் படேடல் என்கும்.

மணம்

தம் ஊராகிய கரம்சாத்திற்கு அண்மையில் உள்ளது காலை என்னும் சிற்றார். இது மூன்று கல் தொலைவில் உள்ளது. அவ்வூரில் நன்மைசால் தொல்குடியில் தோன்றிய நங்கை ஜாவேர்பா என்ற மங்கையர்க்கரசியை நன்ஞள்கொண்டு மணந்தனர். நல்லறமாம் இல்லிருந்து விருந்து பேணல், சுற்றம் ஓம்பல், ஒப்புரவாற்றல், சுகை முதலிய செயல்களை இனிதுறச் செய்தனர். கற்பன கற்று நிற்றலும், கடவுட் கொள்கையும் கடைப்பிடித்து ஒழுகும் பொற்பு நிறைந்தனர். வாழ்க்கை ஊதியமாம் வண்புகழும் எண்மையில் வாய்க்கப் பெற்றனர்.

மக்கட் பேறு

பிறவிப் பெரும்பயன் மக்கட்பேறே. உலகினை உடலுடன் வாழும் உயிர்க்கெல்லாம் உதவுவது ஊராண்மையாகும். வீட்டிடை உயிர்க்கு உடலுற உதவுவது சீராண்மையாகும். சார்தாரும் கற்புறும் மனைவி பால் கடவுள் அருளால் கண்மணியனைய பெண்மகவு ஒன்றும் ஆண்மகவு ஒன்றும் ஈன்றெடுத்தனர்.

மனைவியின் பெரும்பிறிது

சேய்கள் இரண்டும் பிறந்து சின்னட்களுக்குள் தாய் பொன் உலகு எய்தினர். அந்நிகழ்ச்சி சார்தாரின் பற்றற்ற இல்வாழ்க்கைப் பண்பினைப் பலரறிந்து உய்யப் பகர்வதாயிற்று. என்னை? மனைவியார் நோயுற்று வருந்தினர். அவரைப் பம்பாய்க்குப் போகச் செய்தனர். அங்குள்ள சிறந்த காமா மருத்துவ நிலையத்துச் சேர்ப்பித்தனர். பின் மூன்போலவே தாதொழிலைச் செவ்வையாகப் பார்த்து வந்தனர். அகம் புறம் காணப்பெறும் மாறுதல் ஏதும் இன்று. ஒரு நாள் ஆமதாபாத்து மன்றத்தில் வழக்காடிக் கொண்டிருந்தனர். அப்போழுது மின்னஞ்சல் (தந்தி) ஒன்று வந்தது. மன்றத்தலைவர் ஆணைபெற்று அதனைப் பிரித்துப் பார்த்துவிட்டு வழக்கைத் தொடர்ந்து நடத்தினர். இதனைக் கண்ணுற்ற தலைவராம் நடுவரும், நண்பரும் இறும்பூது எய்தினர். செய்தி அறியத் துடித்தனர். சார்தாரின் முகத்தில் மாறுதல ஒரு சிறிதும் காணப்படவில்லை. வழக்கு முடிந்ததும் "கம்பிச் செய்தி தம் அருமை மனைவியார் இறந்ததே" என்று ஏதும் நடுக்கின்றி இடுக்கணின்றி இயற்கைபோல் எடுத்தியம்பினர். இத்தகைய உரம் நிறைந்த உள்ளத்தார் என்க. அம்மையார் விண்ணுறு நாள் ஆயிரத்துத் தொள்ளாயிரத் தெட்டென்ப.

சட்டத்திறலர்

இலண்டன் மா நகர் சென்று முறை நூல் (சட்டம்) நணுக் கம் நிறையப் பெற்றுப் பெரும்புகழ் பெற விழைந்தனர். அங் ஙனமே சென்று எண்ணையில் கற்று வல்வினைவில் தேர்வில் தேறித் திகழ்ந்தனர். இலண்டன் மாநகர் செல்லுங்கால் தம் அரும்பெரும் சேய்கள் இருவரையும் உறவினர்பால் ஒப்படைத் நச் சென்றனர் தேர்வில் முதன்மையாகத் தேறி, வெற்றி பெற்றதுமட்டும் அல்லாமல் ஐம்பது செம்பொன் (பவுன்) பரிசு பெற்றனர். தனிப் பெரும் சிறப்புடன் இனித்த தம் தாய்நாடு மீண்டனர். மீண்டு ஆமதா பாத்தில் குடியேறித் தொழில் நடத் தினர். இவர் வந்துற்ற இரண்டு மூன்று ஆண்டுகளின் பின் காந்தியடிகளும் அவ்வூரையே தம் படைவீடாகக் கொண்டு சபர்மதி யாற்றங்கரையில் முனிவர் உறைவிடமாம் திருமடம் (ஆசிரமம்) அமைத்துத் தங்கினர்.

மேனாட்டு மயக்கு

சர்தார் மன்றம்விட்டதும் சென்று 'குஜராத் கிளப்' என் னும் கழகம் சேர்வர். சீட்டுச் சொக்கட்டான் நாட்டமுடன் ஆடுவர். தாள் சுருட்டு (சிகரெட்) ஓயாது பற்றுவர். மாயா மேனாட்டு மயக்கே ஆயாது கொண்டனர். காந்தியடிகள் வந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்தான் சர்தார் அவருடன் பழக வாய்ப்பு நேர்ந்தது. அடிகள் கற்றறி வல்ல பலர் கூடும் அக் கழகத்துக்கு வந்தனர். வெள்ளையரை விரட்டி நாட்டை விடு தலை செய்யத் தாம் கோரிய உண்மை கடைப்பிடித்தலும் வன்று செய்யாமையுமாகிய உயரிய திட்டத்தை ஒப்புவித்தனர். எல் லாரும் பித்தன் என்று இகழ்ந்து பெருகச் சிரித்தனர். சர்தார் அடிகளின் அமைதியையும் கூச்சத்தையும் கண்டு நகைத்தனர் சுவையுடன் ஆடிய சீட்டாட்டத்தை உடன் ஆடினர்.

அடிகள் தொடர்பு

மீண்டும் இரண்டாண்டுகள் கழித்து ஆனை மேனாட்டு மயக்குப் போனவா தெரியாது, ஒற்றை மெய்ப்பையும் ஓங்கு நாட்டுடையும் உடுத்து அடிகளை அடுத்து அன்புறு தொண்டர் ஆயினர். ஆயினும் அடிகள் கூறுவதை எல்லாம் கண் மூடி வழக்காய் ஆயாது ஏற்கும் சேயாய் இருந்திலர். "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் மெய்ப்பொருள் காண்பது அறிவு" அன்றே?

அடிகள் தம் திட்டத்தை முதன்முதல் செய்து காட்டியது பீஹாரில்தான். அங்கு வெற்றியுறு விட்டாலும் நடுவர் முன்

தம் கொள்கையைக் குறையை எடுத்துரைத்த அழகும் கையாண்ட முறையும் எல்லோர் உள்ளத்தையும் உருக்கின. கழகத்தின் செயலாளர் சர்தாரும் ஹரிலால் தேசாயும் ஆவர். இருவரும் மிக்க ஈடுபாடுகொண்டு அடிகளைக் கழகத்தின் தலைவராக அமைத்தனர். நாடு முழுவதும் அடிகளைப் போற்றின.

சர்தார் - தலைவர்

1917-ஆம் ஆண்டில் கெய்ராவில் வானம் வழங்காதொழிய மானமுறும் வேளாளர் பெரிதும் வருந்தினர். ஊணின்றி உய்யாநோய் கொண்டனர். ஆளும் இனத்தவர் மக்கள் மாளினும் வரி வாங்காது விடா வன்கண்ணரன்றே? நோயுற்ற மாட்டின்மேல் போயிருந்து குத்துதல் கருங்காக்கையின் இருங்குணமன்றே? இதுவும், 'கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோலும்' சொல்லாலும் பொருளாலும் வேறுபாடில்லை. அடிகள் அம்மக்கள் துன்பகற்றத் தாம் முன்நின்று அறப்போர் தொடங்கினர். தமக்குத் துணையாந் தொண்டர் ஒருவரை நாடினர். வல்லபபாய் படேல் வந்து வாய்த்தனர். அவரும் அடிகள் ஆணை வழிநின்று அறப்போர் ஆற்றினர். அதுமுதல் அடிகட்கு எந்நாளும் "படை வேண்டுவழி வாளுதவியும், வினைவேண்டுவழி அறிவுதவியும், வேண்டுப வேண்டுப" வேட்டாங்குதவும் தாட்டாளராயினர். வாள்—ஒண்மை—வாய்மை.

போர்ஸாத் போர்

1917-ல் ஒத்துழையாமை இயக்கத் தொடக்கத்தில் குஜராத்தி மக்கள் அடிகளோடிணைந்து படைகொடு எதிர்க்கும் அரசினரைப் படையின்றி எதிர்க்க முனைந்தனர். அரசினர் அடக்கி ஆளவேண்டுவ செய்தனர். தண்டவரி வாங்கத் துணிந்தனர். கீழோரைக்கொண்டு பெண்களையும் துன்புறுத்த முற்பட்டனர. மக்கள் கூக்குரல, செய்தித்தாள் ஓலம் எலலாம் கூடித் தண்டக்காவலை நீங்கச்செய்தன. 1923-ல் நாகபுரிக் கொடிப் போராட்டம்.

வெற்றிப் போராட்டமும் வீரமொழியும்

1927-ல் பர்டோலியில் வரிகொடா இயக்கப்போரில், "ஒவ்வொரு சிற்றாரும் ஒவ்வோர் பாசறையாக மாறவேண்டும். ஊறு செயாப் போருக்கு (அகிம்சை) உண்மையான கட்டுப்பாடே முதன்மை," என்றனர். "கொடுங்கோல் ஆட்சியினர் வீட்டுப் பொருள்களை விற்பனை செய்ய வெளியாக்குவர்; ஆண்மை மிக்க பெண் திருவினீரே! நீங்கள் உங்கள் கைப்பித்தளை வளையல்களையும்

கழற்றிக்கொடுத்து அவர்கள் கையில் அணியச் சொல்லுங்கள். சட்டிபானைகளை எடுத்துச் செல்வதால் பட்டினிபோட முடியாதெனக் கூறுங்கள். இவற்றுல் நீங்கள் 'மூதின் மகளிர் (வீரப பெண்) ஆதல் தகும்' என்னும் அரும்பெயரை நிறுத்துங்கள்," என்றனர்.

1930 மார்ச்சு 1, 2-ல் உப்புப் போராட்டத்தில் "வெற்றியும் தோல்வியும் உங்களுடைய தன்னிழப் (தியாகம்)பின் சால்பினுல் தான் ஏற்படவேண்டும். குஜராத்தி எவனும் தன்னலங்கொண்டு உயிருக்கஞ்சி வெளி ஏறித் தன்னைக் குஜராத்தி எனச் சொல்லிக் கொள்ளான்," என்றனர். இவை போன்றவை இன்னும் பல.

நகராண்மைத்தலைமை

காங்கிரசு ஏற்படுத்திய முறைப்படி சர்தார் ஆமதாபாத் நகராண்மைத் தலைவராய் 1924 முதல் 1928 வரை நேர்மையாகவும் திறம்பெறவும் வாய்மையாகவும் நடத்தி மக்களுக்கு எல்லா வாய்ப்பும் செய்து கொடுத்து வண்புகழ் பெற்றார்.

குழுத்தலைவர்

1935-இல் சட்டசபைக்குழுவின் (Parliamentary Board) தலைமைநிலை ஏற்று, ஏழு மாகாணங்களிலும் காங்கிரசின் சார்பாகச் சென்று திறம்பெற நடத்த அமைச்சர்களுக்குச் சிறந்த தலைவராய் அறிவாண்மைகளை உற்றுழிக் கூறி ஊக்கிய உரைவோராயும் உறு துணைவராயும் நின்றமை பெரிதும் நினைவு கூரத்தக்கது.

குறுநிலங்களின் (சமத்தானம்) இணைப்பு

இந்திய யூனியன் ஆட்சிக்கீழ் பதினேழு குறு நிலங்கள், ஒன்பது மாகாணங்கள் ஏழு குறுநில (சமத்தான யூனியன்) இணைப்புக்களுமாக இருந்தன. இவ் இந்தியாவை எவ்வாறு ஒற்றுமையாக்கி ஒரு தலைவரின் ஆட்சிக்கீழ் கொண்டு வருவதென உலகமே மருண்டது; உள்ளூர நடுங்கிற்று; ஊழி ஊழியாக முயலினும் ஒண்ணுது ஒண்ணுது என ஒருதலையாக உரைத்தது.

சர்தார் தம் சொல்வன்மையாலும் சோர்வின்மையாலும் அஞ்சாமையாலும் எல்லாக் குறுநில மன்னர்களையும் அணுகினர்; தொகச் சொல்லினர்; தூவாத நீக்கினர்; உளங்கொள உரைத்தனர்; நன்றி பயக்க நாட்டினர்.

(தொடர்ச்சி உசகூ-ம் பக்கம் பார்க்க)

எதிரிலிசோழச் சம்புவராயன்

[சித்தாந்த கலாநிதி, ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை]

சோழ வேந்தனை இரண்டாங் குலோத்துங்கன் சோழ நாட்டையாண்டு வருகையில், வடக்கில் தொண்டைநாடுமுற்றும் அவனது ஆட்சியில் இருந்தது இது அக்காலத்தில் இருபத்து நான்கு பகுதிகளாகப் பிரிந்திருந்தது. ஒவ்வொரு பகுதிக்கும் கோட்டம் என்பது பெயர் தொண்டை நாட்டின் மேற்குப் பகுதி பல்குன்றக்கோட்டம் எனப்படும். இதற்கு வடவெல்லை பாலாறும் தென்னெல்லை தென்பெண்ணையும் மேலெல்லை சவ்வாது மலைத்தொடரும் ஆகும். இப்பல்குன்றக் கோட்டம் அக்காலத்தே சம்புவராயர் என்ற குறுநிலத் தலைவரது ஆட்சியில் இருந்தது. அவர்கட்குப் படைவீடு என்பது தலைநகரமாக விளங்கிற்று.

வடார்க்காடு வட்டத்துப் போளூரிலிருந்து வேலூர்க்குச் செல்லும் பெருவழியில் சந்தைவாசல் என்னும் அழகிய ஊருளது. அதற்கு மேற்கில், படைவீடு, மூன்று பக்கமும் உயர்ந்த குன்றுகளால் சூழப்பட்டு அவற்றினின்று இழிந்தோடி வரும் ஆரணியாற்றின் கரையில் அமைந்திருக்கிறது. சிறு காடு படர்ந்து பசுந்தழை போர்த்து நிற்கும் குன்றுகளின் அடியில் மணல் பரந்த ஆற்றங்கரையில் நின்று நோக்கும் இவ்வூர், படை வீடு என்ற பெயர்தாங்கி யிருப்பது மிகவும் பொருத்தமே யெனக் காண்பார் கருதாதொழியார். ஒரு காலத்தில் இது செல்வம் சிறந்த திருநகரமாய் விளங்கிற்றென்பதைக் காட்டும் சின்னங்கள் பல அங்கே இப்போதும் காட்சியளிக்கின்றன. அங்கே ஒரு தேவி கோயில் உளது. ஆண்டுதோறும் ஆடி வெள்ளிக்கிழமைகளில் நூற்றுக்கணக்கான மக்கள் சென்று அத் தேவியை வழிபடுவர்; அத்தேவியைப் படைவீட்டம்மன் என்று அவர்கள் பெயர் கூறுகின்றனர். சென்ற சில ஆண்டுகட்குமுன் அத்தேவி கோயிலின் திருமுன் ஆடிவெள்ளிக்கிழமைகளில் பருந்தும், கழுகும் வட்டமிட்டுத் திரியும் கொலைக்களமாய்க் காட்சியளித்தது. எண்ணிறந்த கோழிகளும் ஆடுகளும் அத் தேவி பெயரால் கொலையுண்டன. நல்லோர் சிலருடைய முயற்சியால் அக்கொடுஞ்செயல் இப்போது நின்றுபோயிற்றென்று கூறுகின்றனர்.

"இப் படைவீட்டம்மன் கோயில் அங்கு எப்படி உண்டாயிற்று?" என்று அங்குள்ள அறிஞர்களைக் கேட்டால், அதன் தல

புராணத்தைக் காணவேண்டும் என்கின்றனர். அங்கே சிதறிக் கிடக்கும் கோயிற் சுவர்களை நோக்கினால் சில கல்வெட்டெழுத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றைத் தொகுத்து நோக்குவோமாயின் அங்கே 'அம்மையப்பேச்சுரம்' என்றொரு சிவன் கோயில் இருந்ததென்பதும்,[1] அக்கோயிலின் வடபுறத்தே நிறுவப்பெற்ற துர்க்கையே இத்தேவி யென்பதும் தெரிகின்றன. இத்தேவியின் காவலில்தான் பண்டைய நாளில் படைவீட்டு நகரம் விளங்கிற்று. இவ்வூர்க்கருகே வடக்குத் தெற்காகச் சுவர் வைத்ததுபோல் நிற்கும் மலை 'இராஜ கம்பீரன் மலை' யென்று பெயர் கூறப்படுகிறது.

இராஜகம்பீரன் என்பது இந்நகரத்தேயிருந்து ஆட்சிபுரிந்த சம்புவராய மன்னருள் ஒருவன் பெயர். மாறவன்மன் சுந்தர பாண்டியன் என்பவன் ஒருகால் இப்பகுதியைக் கைப்பற்ற வேண்டிப் போர்தொடுத்தான். அவன் முயற்சி வெற்றி தராததாயிற்று. அப்போது சம்புவராயன்பால் இனிதிருந்த இரட்டைப் புலவர்கள்,

> "காற்றூல் அலைப்புண்டும் கண்ணன் கடல்கடைந்தும்
> எற்றூன் எடுத்துவளைத் தெய்திளைத்தும்—ஆற்றுத
> செம்பொன் மலையன்ற சேலுக்கிடம் கொடுக்கச்
> சம்பன் மலைகை தவா[2]"

என்று பாடினர்.

இச்சம்புவராயர்கள், இடைக்காலச் சோழ வேந்தர்களின் காலத்தில் மிக்க சிறப்புற்று விளங்கினர். இவரது ஆட்சி வடக்கே சித்தூர் மாவட்டத்திலும் தெற்கில் திருவாமாத்தூர் வரையிலும் பரவியிருந்தது. கிழக்கில் திருக்கழுக்குன்றமும் அவரது ஆட்சியில் இருந்தமையின், செங்கற்பட்டு, வடவார்க்காடு, தென்னார்க்காட்டு வட்டத்தின் வடபகுதியாகிய இப்பகுதி களைக்கொண்ட நாடு சம்புவராயர்க்கு உரியதாயிருந்தமை விளங்குகிறது.

இவர்களின் ஆட்சியும் மிகச்சிறந்து விளங்கிற்று. இதுவும் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுமுதல் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிவரை மிக்க புகழ்படைத்து நின்றது. மக்கள் பகையும் பிணியும் பகையுமின்றி இன்பவாழ்வு நடத்தினர். களஞ்சியம், கமலபாதம், மருதம், மங்கலம், அரியபாடி, கண்ணமங்கலம், அகத்தேதரிப்பட்டு, ஏனதபாடி, குடியாத்தம, வல்லம் முதலிய பேரூர்கள் சிறந்து நின்றன. இப் பகுதிக்குப் படைவீட்டரசு என்றே பெயரும் வழங்கிற்று. சில செப்பேடுகள்,

---

(1) S. I. I. Vol. I. No. 78. (2) தமிழ் நாவலர் சரிதை 113.

"ஜயங்கொண்ட தொண்டைமண்டலத்துப் படைவீட்டு மகாராஜ்யம்"[1] எனறு கூறுகினறன.

இப்படைவீட்டைச் சூழ்ந்த நிலப்பகுதி மிக்க நீர் நிலவளம் படைத்தது. இன்றும் மேலே சொன்ன பெருவழியாகச் செல்லுவோர் அப்பகுதி இனிய வளம் படைத்துத் தோற்றும் அழகிய காட்சியைக் காண்பர் அதன்கண் இன்றுபோல் அன்றும் வேதியர் பலர் வாழ்ந்தனர் அவர்களிலே கன்னடிகளும், தமிழரும், தெலுங்கரும், இலாளரும் எனப் பல திறத்தர் இருந்தனர் ஒரு காலத்தில் அவரிடையே திருமணம் பொருளாகத் தீய கொள்கையொன்று உண்டாயிற்று. மணப்பெண்ணுக்காக மிக்க பொன்னை மணமகன் தரவேண்டும் என்றும், மணமகனுக்காக மணப்பெண்ணின் தந்தை பொன் கொடுக்கவேண்டும் என்றும் வேதியர்கள் ஒரு வழக்காறு ஏற்படுத்திக்கொண்டனர். இத் தீக் கொள்கையின் பயனாக பொன் கொடுத்து மணம் செய்துகொள்ளும் வாய்ப்பு இல்லாதவர் தவறுன கோத்திர சூத்திர சாகைகளில் மணஞ்செய்துகொள்ளலாயினர். அதனல் அச் சமுதாயத்தின் பண்பாடு வலியிழக்கத் தொடங்கிற்று. அதனை உணர்ந்த அறிஞர் பலர் விரிஞ்சிபுரத்து வழித்துணைநாதர் கோயிலில் கூடியிருந்து, "இற்றைநாள் முதலாக இந்தப்படை வீட்டு ராஜ்யத்துப் பிராமணரில் கன்னடிகர் தமிழர் தெலுங்கர் இலாளர் முதலான அசேஷ கோத்ரத்து அசேஷ சூத்ரத்தில் அசேஷ சாகையிலவர்களும் விவாகம் பண்ணுமிடத்துக் கன்யா தானமாக விவாகம் பண்ணக் கடவராகவும், கன்யா தானம் பண்ணுமல் பொன்வாங்கிப் பெண் கொடுத்தால் பொன் கொடுத்து விவாகம பண்ணினுல் இராஜதாஷணத்துக்கும் உட்பட்டுப் பிராமண்யத்துக்கும் புறம்பாகக்கடவரென்று பண்ணின தர்மஸ்தாபன சமய பதரம்; இப்படிக்கு அசேஷ வித்ய மகாஜனங்கள் எழுத்து..."[2] என்றோர் ஏற்பாடுசெய்துகொண்டார்கள். இவ்வாறே மற்றைச் சமுதாயத்தாரும் தத்தம் சமுதாய வளர்ச்சிக்கு ஆவனவற்றைச் செய்துகொண்ட செய்தியை அப் பகுதியிற் பிற இடங்களிலுள்ள கல்வெட்டுக்களும் மாதேஷிமங்கலத்துக் கல்வெட்டுக்களும் கூறுகின்றன. நாட்டரசியல் நன்கமைந்திருந்தாலன்றி மக்கட்குத் தம் சமுதாய வளர்ச்சிக்கண் கருத்துச் செல்லாது; இப் படைவீட் டரசியலில் மக்களில் ஒவ்வொரு சமுதாயத்தாரும் தத்தம் வளர்ச்சி குறித்து ஆவன செய்வதில் கருத்தைச் செலுத்தியதான்றல் சம்புவராயர்களின் ஆட்சியது சால்பு இனிது விளங்குகிறது.

---

(1) Inti. Ant. Val. XIII பக். 132.
(2) S. I. Inscriptions Vol. I. No. 56. P. 83—4.

இச் சம்புவராயர்களின் ஆட்சி தொண்டைநாடு முற்றும் பரந்து சிறந்து நிற்பினும் இவர்கள் மூடிவேந்தரான சோழ வேந்தர்களுக்கு அடங்கி அவர்வழி நின்றுஒழுகினர். சோழ வேந்தர்கள் வலிகுன்ற நேர்ந்தபோது இவர்கள் படைவேண்டிய வழி வாளுதவினர்; வினை வேண்டியவழி அறிவுதவினர். இவர் களுடைய அருஞ்செயலைப் பாராட்டிச் சோழவேந்தர்களும் இவர்கட்கு இனிய சிறப்புக்களைச் செய்தருளினர். இவர்களிற் பலர் குலோத்துங்கசோழச் சம்புவராயன், வீரநாராயணச் சம் புவராயன் எனப் பெயர் தாங்கியிருப்பதே இதற்குப் போதிய சான்று பகராநிற்கும்.

முன்பு படைவீட்டம்மனைப்பற்றிக் கூறியபோது அங் குள்ள கல்வெட்டுக்கள் அம்மையப்பேச்சுரம் என்ற ஒரு சிவன் கோயிலைக் காட்டுகின்றன என்பது கண்டோம். அப்பெயர், சம்புவராயருள் ஒருவனை அம்மையப்ப சம்புவராயனைக் குறிக்கிறது. அச் சிவன்கோயில அந்த அம்மையப்பசம்பு வராயனே அவன்மகனே கட்டியிருக்கவேண்டும். அவன் வழி வந்தோருள், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இடையில் இராஜகம்பீரச் சம்புவராயன் என்பான் ஆட்சிசெய்தான். அவன் பெயரால்தான் படைவீட்டருகில் நிற்கும் மலை இராஜ கம்பீரன் மலையென்ற பெயர் பெறுவதாயிற்று. அப்பகுதியில் ஆரணியாற்றின் வடகரையில் உள்ள குன்றத்தூர்க்கும் இராஜ கம்பீரநல்லூர்[1] என்பது பெயர்.

இப் படைவீட்டைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்த சம்புவராயர்களுள் எதிரிலிசோழச் சம்புவராயன் என்பான் ஒருவன். அவன் சம்புகுலப்பெருமாளான இராஜகம்பீரன் வழிவந்தோனுவன். அவனுக்குத் துணைவராய் அவன் படைத் தலைவர்களாய் விக்கிரமசோழப் பேரரையன், அம்பலக்கூத்த னென தென்னாட்டரையன் எனப் பலர் இருந்தனர். அவருள் விக்கிரமசோழப் பேரரையன் தொண்டைநாட்டுக் களத்தூர்க் கோட்டத்திலுள்ள மதுராந்தகம் என்னும் ஊர்க்கு அண்மையி லுள்ள குன்றத்தூரில் இருந்துவந்தான். அம்பலக்கூத்தன் தென்பெண்ணையாற்றின் வடகரையான மலாடு என்ற இருங் கோளப்பாடி பனையூர் நாட்டு மலையனூர் என்னும் ஊரிலிருந் தான். இவனுடைய போர்வன்மையும் மனநன்மையும் சம்புவ ராயனுக்குப் பேருவகைதந்தன. அதனல் சம்புவராயன் அவனை ஒரு படைத்தலைவனுக்கிச் செம்பூர்க்கோட்டத்து முக் காட்டுப்பட்டில் தங்கியிருக்குமாறு பணித்திருந்தான்.

---

(1) S. I. I. No. 74. பக். 105.

பேரரையனும் தென்னட்டரையனும் சம்புவராயனுக்கு இரு கண்கள்போல் திகழ்ந்தனர். கண்ணிரண்டும் ஒன்றையே காணும் என்பதற்கேற்ப, இருவர் உள்ளங்களும் ஒரு பொருளிலே ஒன்றிநின்றன. தென்னட்டரையனும் பேரரையனும் அந்நாட்டிற் பெண்மைநலத்தால் புகழ்பெற்றிருந்த வம்பு என்பவள்பால் உள்ளம் ஒன்றிநின்றனர். இருவரும் அவளை மணந்துகொடற்கு முயன்றனர். அவளைப்பெற்ற தந்தையும் உடன்பிறந்தவரும் இருவரிடத்தும் ஒத்த பண்பும் செயலும் இருப்பதுகண்டு செய்வதுதெரியாது திகைப்புற்றனர். இருவருள் ஒருவரைத் தேர்ந்துகொள்ளும் உரிமையை அவள்பாலே விட்டொழித்தனர். இருவருடைய குணஞ்செயல்களையும் கண்டறியும் வாய்ப்பும் வம்புவுக்கு வழங்கப்பெற்றது.

முடிவில் ஒருநாள் வம்பு என்பவட்குத் தன்னுட்கருத்தைத் தெரிவிக்கவேண்டிய நிலையுண்டாயிற்று. அவளுடைய உள்ளத்தைத் தென்னட்டரையன் தன் குணஞ்செயல்களாற் கவர்ந்துகொண்டான் என்பது புலனையிற்று. பெற்றோரும் உற்றோரும் உடனிருப்ப வம்புவுக்கும் தென்னட்டரையனுக்கும் திருமணம் நடந்தது. தென்னட்டரையன் வாழ்க்கைத்துணைவியாய் வம்புவும் அவனது திருமனைசென்று சேர்ந்தாள்.

தென்னட்டரையன் வம்புவை மணத்தற்குச்செய்த முயற்சியிடையே பேரரையனைப்பற்றிச் சில வடுவானவுரைகளை வழங்கியிருந்தான் என்றும், அவ்வாறு வடுக்காணும்வகையில் தன்பால் குற்றமொன்றும் இல்லையென்றும் பேரரையன் எண்ணினன். அவ்வெண்ணத்தினூடே அழுக்காற்றுத்தீயும் எழுவதாயிற்று. அதனால் தென்னட்டரையனுக்கும் பேரரையனுக்கும் மனக்கடுப்புண்டாயிற்று. இடையிடையேயுண்டான அரசியல் நிகழ்ச்சிகள் சிலவற்றில் தென்னட்டரையன் மேன்மையுற்றுச் சம்புவராயன்பால் சிறப்புக்கள் பெறுவானுயினன். இவ்வாற்றால் பேரரையன் உள்ளத்திற் பிறந்திருந்த கடுப்பு வளர்ந்து பகையாய் மூண்டது. நாள் செல்லச்செல்ல, தென்னட்டரையனை ஒழித்தாலன்றித் தனக்கு மனவமைதியெய்தாது என்னும்

எய்

பேரரையன் எண்ணியது எண்ணியவாறு முடிக்கும் மனத்திட்பமுடையவன். அதனால், தன் மனத்துக்கு இயைந்த மறவாகளைக் கலந்து தன் கருத்தை முற்றுவிக்குமாறு பணித்து அதற்கு வேண்டுவன செய்துதந்தான். தென்னட்டரையன் முக்காட்டுப்பட்டில் தானைத்தலைவனுப்பப் பாடிகாவல் புரிந்துவந்தான். அவனுக்குப பேரரையன் தன்பால் கறுவுகொண்டிருக்கிறான் என்ற செய்தி தெரியாது. பெண் விழைவால்

பெருந்தீமைகளைச் செய்தோர் வரலாறுகள் பல அறிந்திருந்தா னாயினும், பேரரையன்தான் அறிவு பேதுறுவது நன்றன்று என் பதை யுணர்ந்திலன். ஒருநாள் இரவு முக்காட்டுப்பட்டில் தென்னாட்டரையன் தனித்திருக்கும் செவ்விநோக்கிப் பேரரை யன் விடுத்த கொலைமறவர் வந்து அவனை வளைத்துக்கொண்ட னர். தென்னாட்டரையன் நெடுநேரம் அவரோடு கைகலந்து பொருதான். முடிவில் பேரரையனை தென்னாட்டரையனைக் கைப்பற்றித் தன் கைவாளால் எறிந்து கொன்றுவிட்டு ஓடிப் போனான்.

தென்னாட்டரையன் கொலையுண்டு வீழக் கண்ட வம்பு ஓவெனக் கதறிப்புலம்பினாள். அருகிருந்த தாணைமறவர்கள் வந்துகூடுமுன் பேரரையனுடைய கொலைமறவர்கள் ஓடிமறைந் தனர் வம்புவுக்குக் கைபறவு பெரிதாயிற்று. கணவன் உடல்மேல் வீழ்ந்து புலம்பினாள். செய்தியறிந்ததும் அவரு டைய பெற்றோரும் உடன்பிறந்தாரும் வந்துசேர்ந்தனர். அவர்கள் எத்துணையோ சொல்லித்தேற்றியும் தேறாளாயின வம்பு, அவன் உடலையெரித்த ஈமத்தியிலேயே தானும்வீழ்ந்து உயிர்கொடுத்தாள.

தென்னாட்டரையனை யெரித்த ஈமத்தியை வலம்வருகை யில், வம்பு, விக்கிரமசோழப் பேரரையன் மறவர் சிலருடன் போந்து தன் கணவனை வளைத்துக்கொன்ற திறத்தை விரிவாகச் சொல்லிப் புலம்பினாள். அப்போது அதனைக் கேட்டிருந்தவர் களில் தென்னாட்டரையன் தமையனும் ஒருவனுவான். அவன் தென்னாட்டரையன்போல் பிறிதோரிடத்தில் பாடிகாவற் றலைவ னாய் இருந்தான். அவன் பெயர் இராமநம்பி யான இருங்கோள ப்பாடி நாடாள்வான் என்பது தன் தம்பியைக் கொன்ற பேரரையன்பால் இருங்கோளப்பாடி நாடாள்வானுக்குப் பெரிய பகைமையுண்டாயிற்று. பழிவாங்கும் மனப்பான்மை அவன் உள்ளத்தே குடிகொண்டது.

நாடாள்வான் பேரரையனைவிட வினைத்திட்பமும் அதற் கேற்ற மனத்திட்பமும் உடையன். கொலைமறவர் பலரைச் சேலுத்திப் பேரரையனைப்பற்றிக் கொலைபுரியுமாறு பணித் தான். அவர்கள் பேரரையனைத் தேடலுற்றனர். பேரரையன் தான்செய்த தவற்றை யுணர்ந்து மறைந்துகொண்டான். அச் செயலால், ஒரு குற்றமும் செய்யாத அவன் துணைவர் பலர் மாண்டனர்; உறவினர் பலர் துன்புற்றனர்; அவர்தம் வீடுகள் தீக்கிரையாயின; சுருங்கச்சொன்னால், பேரரையனுடைய களத் தூர்க்கோட்ட முழுதும் நாடாள்வான் விடுத்த மலாடருடைய

பகைப்புயல் வளைத்து உயிர்ச்சூறை யாடத் தொடங்கிற்று. இதனை மறைந்திருந்துகண்ட விக்கிரமசோழப் பேரரையன் இனித் தான் உய்தற்கு வழியில்லையென்பதை யுணர்ந்தான். நேரே படைவீடுசென்று தனக்கும் நாடாள்வானுக்கும் முதலியான எதிரிலிசோழச்சம்புவராயனைக் கண்டு அவன்பால் நடந்தது முற்றும் தெரிவித்து உய்திபெறுவதெனத் துணிந்தான். இரவோடிரவாய்ப் படைவீட்டையடைந்து எதிரிலி சோழச் சம்புவராயனிடம் உண்மையை உள்ளவாறு உரைத்து உய்தி நல்குமாறு வேண்டினன்.

சோழச் சம்புவராயனுக்குத் தென்னட்டரையன் கொலையுண்டிறந்ததுபற்றி ஒருபால் வருத்தமும், பேரரையன் உண்மையை ஒளியாமல் உரைத்ததுபற்றி ஒருபால் உவப்பும் உண்டாயின. பேரரையன் செய்த தீச்செயல்பற்றி இருங்கோளப்பாடி நாடாள்வான் மேற்கொண்ட செயலை எண்ணினன். தன் தம்பியைக் கொன்றவன் சிறப்புடைய தானைத்தலைவனாக இருத்தலால் அவன் செயலை வேறுவகையில் ஆராய்ந்து முறை செய்வது உள்ளத்தெழுந்த சினத்திக்குப் போதிய இரையாகாதென எண்ணி, நாடாள்வான் பேரரையனைப் பெருந்தொல்லைக்கு உள்ளாக்கினன் என்பதையும் எண்ணினன்; அவனைத் தான் வெறுப்பதிலும் பயனில்லையெனச் சம்புவராயன் தெளிந்தான் நாட்டில் சிறந்த சான்றோர்களை வருவித்துச் செயல் வகை யாதெனச் சூழ்ந்தான்.

முடிவில் சான்றோரும் தானுமாய் இருந்து இருங்கோளப்பாடி நாடாள்வானை வருவித்தான் இருவர் கருத்துக்களையும் சான்றோர் கேட்டறிந்தனர். இருவரும் உண்மையைச் சிறிதும் ஒளியாமல உரைத்தது கண்டனர் சான்றோர். முடிவில் சம்புவராயன் சான்றோர் சார்பாகப் பின்வருமாறு கூறலுற்று, "பேரரையனும் நாடாள்வானும் நம் அரசியலுக்குப்பெருந்துணைவர்கள். இவர்களிடையே போரும் பூசலும்உண்டாயின். வேற்றுநாட்டுப் பகைவர்க்கு நகையும் எளிமையும் உண்டாகும். விரும்பியவண்ணம் பேரரையனைக் கொல்வதலால், நாடாள்வான், தன் தம்பி தென்னட்டரையனை மீளப் பெறப் போவதில்லை. அதலால் அவன தூயிர் ஒருவகை ஆக்கமும்பெறப போவதில்லை. மறத்திற்கும் அறமேதுணை. பேரரையன் செய்த மறவினைக்குக் கழுவாய் அறஞ் செய்வதேயாகும். அஃதாவது, நாடாள்வான் பேரரையன்பால் கொண்ட சினத்தைத் தணிக்கவேண்டி அவனைப் பகைப்பதைக் கைவிடவேண்டும் என்பது தெளிவாக விளங்குகிறது. பேரரையலால் உண்டான கொலைவினை ஒன்றலால், நாடாள்வாலால் பல உண்டாகியிருக்

கின்றன. ஆகவே இருவரும் தங்கள் தங்கள் செயல்குறித்துக் கழுவாய் செய்யவேண்டும்,'' என்று தீர்ப்பளித்தனன்.

மேலும், சம்புவராயன், தான் உரைத்த தீர்ப்பு இருதிறத் தாருக்கும் சான்றோராகிய நாட்டவர்க்கும் மகிழ்ச்சி தருவதைக் கண்டுகொண்டு, விக்கிரமசோழப் பேரரையனை முதற்கண் நோக்கி, ''நீ உன்னுற் கொலையுண்ட தென்னுட்டரையன் பொருட்டும் அவன் மனைவி வம்பு என்பாள்பொருட்டும் இரண்டு நந்தாவிளக்கு வைத்தல்வேண்டும்,'' என்று பணித்து, இருங் கோளப்பாடி நாடாள்வானை நோக்கி, ''நீயும் இவ்வாறே நந்தா விளக்கு இரண்டு வைக்கவேண்டும்,'' என்று ஆணையிட்டான்.

இதுகேட்ட அறங்கூறவையத்தார், ''எங்கள் வேந்தனை சம்புகுலப்பெருமாள் பெயராலும் எதிரிலி; போர்க்குரிய மறத் துறையிலும் எதிரிலி; அரசியற்குரிய அறத்துறையிலும் எதி ரிலி எனப் பாராட்டி மகிழ்ந்தனர். தானைத்தலைவர் இருவரும் முகமலர்ச்சியோடு அத்தண்டத்தை யேற்றனர்.

முடிவாக, எதிரிலிசோழச் சம்புவராயன், இருவரையும் ஒருங்கு நிறுத்தி, ''இவ்விளக்கீடுமட்டில் அமையாது; மற்றொரு தண்டம்உளது; அதனையே நீங்கள் மனங்கலந்து மேற்கொள்ள வேண்டும்,'' என மொழிந்தான். அவையினரனைவரும் வியப் பும் பெருமிதமும்கொண்டஉள்ளத்தராய்ச் சம்புவராயனை நோக் கினர். தன் மலர்ந்த முகத்தில் சிறிது விருவிருப்புத் தோன்ற, இருவரையும் உருத்துநோக்கி, சம்புவராயன் தன் மடித்த வாயைத் திறந்து, ''நீங்கள் இருவரும் இனி ஒருவர்மேலொரு வர் பகை கொள்வதில்லையென உடன்பட்டு உறுதி தரவேண் டும்; நீங்கள் செய்யும் விளக்கீடு தென்னுட்டரையன் அவன் மனைவி ஆகிய இருவருயிரும் நலம் எய்துதற்காயிற்று; அத் தென்னுட்டரையன் இருந்து இந்நாட்டு அரசியலுக்குச் செய்த ஆக்கத்தை நீங்கள் இருவரும் செய்யத்தக்கவ ராகின்றீர்கள். அந்த ஆக்கம் உங்கள் இருவருடைய மனவொருமையால்தான் உண்டாகும். ஆதலால் நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் பகை தொடர்வதில்லையென உறுதிதருக,'' எனக் கட்டுரைத தான். அது கேட்டதும், அரசவையில் உடன்பாட் டாரவாரம் உண்டாயிற்று. இருவரும் பல்லோரும் காண உறுதி மொழிந் தனர்.

இனி, சான்றோருடன் கூடியிருந்து ஆராய்ந்து, விளக்கீட் டினைத் திருக்கழுக்குன்ற முடையார் கோயிலில் வைப்பதென முடிவு செய்தனர். இருவரும் அதற்கு உடன்பட்டனர்.

இருவருள் பேரையனே முதற்கண் குற்றம் செய்து பின்னர் நாடாள்வானுல் அலைப்புண்டு சம்புவராயன்பால் உய்தி நாடினவனுதலால், அவனது உட்ன்பாடு, தம்பியான தென்னட்டரையனுக்கும் அவன் மனைவி வம்புவுக்கும் நன்றுண்டாக விளக்கெரிப்பதற்கு காடாள்வான் நல்கிய உடன்பாட்டினும் சிறந்ததெனக்கொண்டு, அதனையே கல்லில் முதலில் வெட்ட வேண்டும் என்று ஆணை தந்தனர். அக்கல்வெட்டு, "இருங் கோளப்பாடி நாடாள்வான் இரண்டு விளக்குக்கும் சம்மதித்து இருவரும் தங்களில் உபயம்வந்து உடையார் திருக்கழுக்குன்ற முடையபர் திருக்கோயிலிலே வைப்பதென்று இருங்கோளப் பாடி நாடாள்வான் சொல்லி நானும் என் வமிசத்தாரும் இப் பகை தொடரவும் சொல்லவும் பெறுதோமாகச் சம்மதித்து இத் தென்னட்டரையனுக்கும் அவன் அகமுடையாளுக்குமாக வைத்த திருநந்தாவிளக்கு இரண்டுக்கும்விட்ட சாவா மூவாப் பேராடு தொண்ணூறும் பசு முப்பத்தொன்றும் இத்தேவர் கோயிலிலேவிட்டுச் சிலா லேகைபண்ணிக் கொடுத்தேன்; இத்தன்மம் அழியாமற் காப்பான் அடி என் தலைமேலன,"* என்று கூறுகிறது.

தமிழ்ச் சொல்

[கா. கணபதி]

அறிவுமிகும் அன்புமிகும் ஆற்றல்மிகும் சொல்லாம்
அமைதியுடன் அருள்கலந்து ஆர்வம்மிகும் சொல்லாம்
செறிவுமிகும் செம்மைமிகும் செப்பும்நல்ல சொல்லாம்
சிந்தைகளி கூரவரும் சீர்மைமிகு சொல்லாம்
நறியமலர் போலமணம் நாளுமிகும் சொல்லாம்
நயவுரைகள் பலவாக்கும் நாகரிகச் சொல்லாம்
வறியவரும் வள்ளல்களாய் வாழவருள் சொல்லாம்
வண்மைமிகு தண்டமிழ்ச்சொல் வாய்மையுறுஞ் சொல்லே.

* Annual Report on South Indian Epigraphy for 1932—33. Part II. Para 25. No. 162 of 1932—33.

போமோ துன்பம்?*

[புதுவை, முதுகண்ணன்]

குழுறுகின்ற கருங்கடலே! உனக்கு வாய்ந்த
குறைதன்னைக் கூறுகின்றேன்; சற்றுக் கேளாய்!
குமரியையுன் உருவழித்த கொடுமை உன்னிக்
குலைகின்றாய்! அம்மட்டில் நின்றாய் இல்லை
தமதுமனை மக்களெலாம் பிரிந்து செல்வம்
சார்ந்துபிற நாட்டிற்குச் சென்றோர் தம்மை
அமையாத தீவினையால் அடக்கிக் கொண்டாய்!
அழியாத பழிசுமந்தாய் போமோ துன்பம்? க

பொருளீட்டிப் பெருவாழ்வை நடத்த எண்ணிப்
பொலிவழியத் தந்தலைவி நீங்கிச் சென்ற
பெரும்பாலோர் வாழ்வைநீ ஆழ்த்திக் கொண்டாய்
பேதுற்றே அவர்வரவை நோக்கி நாளும்
வரும்வழியில் விழிவைத்துக் காணு தேங்கி
வருந்தியஅத் தலைவியர்கள் இட்ட சாபம்
பொருந்தியதால் தவிக்கின்றாய்! ஒய்வில் லாமல்
போய்ப்போய்நீ கரைவந்தால் போமோ துன்பம்? உ

கரையினிலே சிறுமியர்கள் வண்டல் கோலி
களிப்புடனே விளையாடும் போதுவந்து
திரைக்கரத்தால் அழித்தேதாடிச் சென்ற தாலே
சிறுமியர்கள் மனம்நொந்து வைத சொல்லை
குரைகடலே நீநினைந்து குலைகின் றாயோ?
குடும்பமெனும் பெருஞ்சுமையை இதற்குள் ளேற்றுப்
பெருந்துயரில் விழவேண்டாம் என்று யேனும்
பெரிதுனது வினைதீதே! போமோ துன்பம்? கூ

புதுப்புலன்கள் கண்டறிய வேண்டி நாளும்
பொய்ம்மை மிகும் உனைநம்பி அறிஞர் பல்லோர்
இதழுடனே கப்பலிலே செல்லுங் காலை
எறிதிரைசூழ் கொடுங் கடலே! நீயோ அன்றோர்
புதுமைமிகும் குறிப்பெல்லாம் அடக்கிக் கொண்டு
பொல்லாங்கு செய்தனையே! அந்தோ! அந்தோ!!
முதிரறிவின் திறன்கண்டோர் ஆவி உன்னை
முனைப்படங்கச் செய்யாதோ? துன்பம் போமோ? சு

---

* தூண்டுதல். 'விக்தோர் உய்கோ'வின் (Victor Hugo) 'ஓசெயானேநேக்' (Oceanonox) என்ற பிரெஞ்சுப் பாடலின் தழுவல்.

'பாணர் கைவழி' மதிப்புரை

(மறுப்பு)

[புலவர், ஞா. தேவநேயப் பாவாணர்.]

[16—7—50-இல் வெளிவந்த 'இந்து'ச் செய்தித்தாளில் 'பாணர் கைவழி' யைப்பற்றித் திருவாளர் P. சாம்பமூர்த்தி அவர்கள் வரைந்துள்ள மதிப் புரையைப் பற்றியது.]

திருவாளர் P. சம்பந்தமூர்த்தி அவர்கள் பாணர் கைவழியைப் பற்றிய தம் மதிப்புரையைத் தொடங்கு முன்னரே, காலஞ் சென்ற மறைத்திரு விபுலானந்த அடிகள் இயற்றிய யாழ்நூல் மதிக்கொணாக் களஞ்சியமென்றும், அதுபற்றி இற்றையுலகம் அவர்கட்கு மிகக் கடப்பட்டுள்ளதென்றும், அவர்கட்குப் புகழ் மாலை சூட்டுகின்றார்கள். இதற்குக் காரணம், அந்நூலின் போலி முடிபுகளெல்லாம் மதிப்புரையாளரின் விருப்பத்திற்கிசைந் திருத்தலே.

தமிழரென்று தம்மைச் சொல்லிக்கொண்டு ஆராய்ச்சியின் பேரால் தமிழுக்குப் பெருவகை விளைத்து ஆரிய ஏமாற்றத் திற்கு அரண் செய்தவருள் விபுலானந்த அடிகளும் ஒருவர் என்பது, இசையியல்புந் தமிழிசைத்திரமும் அறியாத பலர்க்குத் தெரியாதுபோயினும், அவற்றையறிந்த ஒரு சிலர்க்கேனும் தெரியாததன்று. அவர்கள் உடல் தாங்கியிருந்தபோதே 'குரல் மத்திமம்' என்னும் அவர்கள் கொள்கையைக் கண்டித்துக் 'குரல் சட்சமே' என்று 'செல்வி'யில் ஒரு கட்டுரை வரைந்தேன். அதற்கு அவர்கள் ஓர் இளைஞர் பெயரால் மறுப்பெழுதினர்கள். யான் அம்மறுப்பிற்கொரு மறுப்பு வரைந்தேன். அதோடு நின்றது அவர்கள் தருக்கு. 'முதற்கோணல் முற்றுங்கோணல்' ஆதலின் அடிப்படைக் கொள்கையே தவறுயிருக்கும்போது, அவர்கள் நூன்முடிபு எத்தகையதாயிருக்கும்? ஒரு மூலை முடங்கியில் கூட்டங்கூட்டி, எதிர்ப்பாளரைச் செலவிற்குப் பணங்கொடுத்து வரவழைக்காது, இசைத்தமிழ் மரபறியாதார் முன்னிலையில், அவர்கள் தங்கள் யாழ்நூலை அரங்கேற்றியதாலும்; கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் அதனை வெளியிட்டதாலும்; அது புரையற்ற நூலாகப் போற்றப்பட்டுவிடாது. துவராடையணிந்த வர் நூலெல்லாம் துகளற்றன என்னும் கொள்கை எம்மனோர்க் கில்லை.

இனி, மதிப்புரையாளரின் உடம்படாக் கூற்றுக்களை யெல்லாம் ஒவ்வொன்றுகக்கூறி மறுப்பாம்.

கூற்றுக்கள் யாவும் இயன்றவரை சுருங்கிய அளவிற கூறப் பெறும்.

1. "8-ஆம் நூற்றாண்டிற்கும் 13-ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் வீணை என்னும் பெயர் யாழிசையோடு கூடிய மிடற் றிசையையே குறித்ததாயின், வீணை வாசிப்பின் செயல்முறை யும் அது பற்றிய இடக்கை வலக்கைத் தொழில் வேறுபாடுகளைக் குறிக்கும் மிகப் பலவாகிய குறியீடுகளும் பொய்யாய்ப்போம்."

இப்போது வீணையென வழங்கும் கருவி 8-ஆம் நூற்றாண் டிற்கும் 13-ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் தமிழ்நாட்டிலிருக் கத்தான் செய்தது. ஆனால், அது தொன்று தொட்ட முறைப்படி யாழ் என்னும் தமிழ்ப் பெயராலும் சிறுபான்மை வீணை என்னும் வடமொழிப் பெயராலும் அழைக்கப்பெற்றது. இவ் வடமொழிப் பெயர் கடைச்சங்கக் கால இறுதியில்தான் தமிழ் நாட்டிற் புகுத்தப்பட்டது. அதற்குமுன் வடசொற்கள் தமிழில் மிக அருகியே வழங்கின. வடசொல்லே கலவாத தனித்தமிழ் வழங்கிய காலமுமுண்டு. அது ஆரியர் தென்னாட்டிற்கு வரு முன்னதாகும்.

வீணை என்னும் பெயர் தனித்து வரும்போது, செங் கோட்டி யாழையே அல்லது பிற யாழையே குறிக்கும்.

"மங்கல மிழப்ப வீணை மண்மிசை"

என்று இளங்கோவடிகளும,

"மாசில் வீணையும் மாலை மதியமும்"

என்று திருநாவுக்கரசரும்,

"குழலினேரை வீணை மொந்தை கொட்ட முழவதிர"

என்று திருஞான சம்பந்தரும், கூறுதல் காண்க.

சிந்தாமணியில், கந்தருவதத்தையா ரிலம்பகத்தில், யாழ் என்னும் பெயரும் வீணை என்னும் பெயரும் ஒருபொருட் கிளவியாய் ஒன்றுக்கொன்று பதிலாக வருகின்றன. தேவாரத் தில், யாழ் என்னும் பெயர் வருமிடத்தில் வீணை என்னும் பெயரும் வீணை என்னும் பெயர் வருமிடத்தில் யாழ் என்னும் பெயரும் விலக்கப்பட்டன. நாரதயாழ் நாரதவீணை என ஒரே கருவி குறித்து இருபெயர் வழக்குமுள்ளது.

வீணை என்னும் பெயர், யாழ் என்னும் பெயரோடு கூடி வருமிடத்தில் மட்டும், தனி மிடற்றிசையையோ யாழிசை யொடு கூடிய மிடற்றிசையையோ குறிக்கும். இதற்குச் சிந்தா

மணி மூலத்தினின்றும் உரையினின்றும் 'பாணர் கைவழி'யாசிரியரால் போதிய சான்றுகள் தரப்பட்டுள்ளன.

யாழ் என்னும் சொல்லும், பொதுப்பட்ட இசையையும் இசைப்பகுதியான பண்ணையும் இசைக்கருவியான யாழையும், இடத்திற்கேற்பக் குறிக்கும்.

"செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
(அகத்திணையியல், 18)

"துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே"
(களவியல், 2)

என்று தொல்காப்பியரும்,

"யாழோர் மணவினைக் கொத்தனள் என்றே"
(மணிமேகலை, 22 :—86)

என்று சீத்தலைச் சாத்தனாரும், யாழ் என்னும் சொல்லை இசையென்னும் பொருளில் ஆண்டனர்.

"பாலை குறிஞ்சி மருதஞ்செவ் வழியென
நால்வகை யாழா நாற்பெரும் பண்ணே"

என்று பிங்கல முனிவர் அச்சொல்லைப் 'பண்' என்னும் பொருளில் ஆண்டனர்.

நரப்புக் கருவியைக் குறித்து அச்சொல் சங்கநூல்களிற் பயின்று வருதலானும், அற்றை உலக வழக்கிலும் அதற்கு அதுவே பொருளாதலானும், அதற்குச் சான்றுகள் வேண்டுவதில்லை.

ஆகவே, 8-ஆம் நூற்றாண்டிற்கும் 13-ஆம் நூற்றாண்டிற்கும் இடையில், இக்காலத்து வீணையைப் பெரிதும் ஒத்த செங்கோட்டியாழ் இருந்ததென்றும்; அதற்கு வீணையென்னும் பெயரும் சிறுபான்மை வழங்கிற்றென்றும்; அப்பெயர் ஆகுபெயராக மிடற்றிசையையும் உணர்த்தினதினால், இருபெயரும் இணைந்துவரும் இடைக்கால நூற்பகுதிகட்கு உரையாசிரியர் உரை வரைந்தபோது, அவற்றுள் தென்சொல்லைக் கருவிப் பெயராகவும் வடசொல்லை மிடற்றிசை குறித்ததாகவுங் கொண்டனர் என்றும்; செங்கோட்டியாழினும் வேறுகச் சிறந்ததொரு நரப்புக் கருவி இந்தியாவிலேயே இதுவரையிருந்ததில்லை யென்றும்; யாழ் வீணை என்னும் இரு சொற்களும் ஒரு பொருட் கிளவியாய் ஒரே கருவியையே குறிக்குமென்றும்; இதனால் வீணைவாசிப்புச் செயன் முறையும் அதுபற்றிய குறியீடுகளும் பொய்யாய்ப்போகா என்றும்; அறிந்துகொள்க.

2. "யாழ் வடிவைப்பற்றி விபுலானந்த அடிகள் ஒரு வகையாகவும், திரு. வரகுணபாண்டியனார் மற்றொரு வகையாகவும், வரைந்துள்ளனர்."

செங்கோட்டி யாழைப்பற்றி அடிகள் வரைந்து காட்டியுள்ள படமே உண்மையானதாயின், வறுவாய், கவைக்கடை, உந்தி, ஒற்றுறுப்பு, தந்திரிகரம், மாட்சம், தகைப்பு, வணர் முதலிய உறுப்புக்களெல்லாம் எங்கே? அவற்றைக் கூறியுள்ள இளங்கோவடிகளும் அடியார்க்கு நல்லாரும் பித்தரோ? அன்றிப் பொய்யரோ?

மறைதிரு. விபுலானந்த அடிகள தட அறியாதவர்கள் என்பது முன்னரே கூறப்பட்டது. அதையே உண்மையென்று கடைப்பிடிக்க.

3. "உருவச்சிலைச் சான்றை நோக்குவோமாயின், மேல் நாட்டிலும் கீழ்நாட்டிலும் பண்டைக் காலத்திலும் இடைக் காலத்திலுமிருந்த யாழ் வில்யா ழொத்திருந்ததேயன்றி வீணை யொத்திருந்ததன்று என்பது அறியப்படும். இவ்வியல்பிற்குத் தென்னாடு விலக்கன்று."

பண்டைத் தமிழர் இற்றைத தமிழர் போன்றவரல்லர். முன்னவர் நாகரிகத்திலும் அறிவிலும் நாயகம் பெற்றவர்; பின்னவர் அடிமைத்தனத்திலும் பேதைமையிலும் பெயர்பெற்றவர்.

'செய்கலைக்கரசி செய்யுள்' (Poetry is the Queen of Arts) என்பர் சீரியோர். பண்டைத் தமிழர் செய்யுட் கலையில் ஒப்புயர்வற்றவர் என்பது உலகறிந்த வுண்மை. வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா என்னும் பாகுபாடு தமிழுக்கே சிறந்தது அவற்றுள்ளும், வெண்பாவும் கலிப்பாவும் போன்ற யாப்புவகைகளை வேறெந்நாட்டாரும் கனவிலும் கருதியிருக்க முடியாது. யாப்பிலக்கணத்தை யுள்ளிட்ட பொருளிலக்கணமோ மொழியிலக்கணத்தின் கொடுமுடியாய்த் தமிழரைத் தனிவகுப் பினராகக் காட்டுவது. இத்தகைய இலக்கணத்தாற் பொலிவு பெற்ற இயற்றமிழோடமையாது, இசைநாடகக் கலைகளையும் அதனொடு கூட்டி முத்தமிழ் என வழங்கியதான்றே, பண்டைத் தமிழரின் இசைப்புலமை யேற்றத்தையும் நாடகப்புலமை நாயகத்தையும் மொழித்திற முதன்மையையும் மதிநுட்ப மாண்பையும் ஐயந்திரிபற விளக்கப் போதியசான்றும். இத்தகை மொழிவளர்ச்சிக்கேற்ப, வாழ்க்கைமுறை ஒழுக்கம் தொழில் திறம் பொறிவினை முதலிய பிறநாகரிகத் துறைகளிலும் பண்டைத் தமிழர் ஏற்றம் பெற்றிருந்தனர். சிறப்பாக, செய் யுட்கலையில் சீரிய புலமைவாய்ந்திருந்த அவர், அதனொடு நெருங்

கிய தொடர்புள்ள இசைக்கலையிலும் ஏற்றம் பெற்றிருந்தனர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

பழந்தமிழ் இலக்கியம் பலவகையில் இறந்து பட்டமையையும், தற்காலத்தமிழன் குலப்பிரிவினையால் தாழ்வுண்டிருப்பதையும், இந்திய வரலாறு தலைகீழாய் எழுதப்பட்டிருப்பதையும், பயன்படுத்திக்கொண்டு, பண்டைத்தமிழன் கண்ட யாழ் வில் யாழே என்பது நடுநிலை திறம்பிய நலமில் கூற்றும்

4. "திருஞான சம்பந்தர் பாடிய யாழ்முரிப்பண்ணைத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம் யாழிலிட்டுக் காட்டமுடியவில்லை. அவ்யாழ் வீணையாயிருந்திருந்தால் அங்ஙனம் தவறியிருக்க முடியாது. ஏனெனின், மிடற்றிசையின் எத்திறநுணுக்கத்தையும் வீணையிற்காட்ட இயலும்; ஆதலால், 9-ஆம் நூற்றாண்டுவரை தமிழகத்திலிருந்தது வில்யாழ்வகையே அதன்பின் (வடநாட்டினின்று) வீணை வந்தது. அது வந்ததும் யாழ் நெகிழவிடப்பட்டது."

திருநீலகண்ட யாழ்ப்பாணர், யாழ்முரிப் பண்ணைத் தம் யாழிலிட்டுக் காட்ட முடியாமைக்கு, முதலாவது, அவரது அளவிறந்த சிவபத்தியே காரணம். தருமபுரத்திலுள்ள அவருடைய உறவினர், அவர் திருஞானசம்பந்தரின் திருப்பதிக இசையை யாழ்ப்படுத்தி வந்த திறனைப் புகழ்ந்தபோது, அவர் அதற்கு மிக வருந்தி, யாழிலிட்டுக்காட்ட முடியாதவாறு திருப்பதிகம் பாடும்படி தாமே திருஞானசம்பந்தரை வேண்டினர். இதனால், யாழிலிட்டுக்காட்ட முடியாத பெருமை திருப்பதிக இசைக்கிருத்தல் வேண்டுமென்று அவர் பேரவாக் கொண்டமை புலனாகும். இத்தகைப் பத்திநோக்குடையவர் எங்ஙனம் தம் திறமையை அன்று காட்டியிருக்க முடியும்? அவர் காட்ட முயன்றிருப்பினும், அவரது அச்சமனப்பான்மை எங்ஙனம் இடந்தந்திருக்கும்?

இரண்டாவது, யாழில்மட்டுமன்றி வேறெவர் மிடற்றிலும் இசைக்க முடியாதவாறு, இறைவனருளால் இறும்பூதுச் செயலாக யாழ்முரிப்பண்ணைத் திருஞானசம்பந்தர் பாடினரென்று, சேக்கிழார் மிகத்தெளிவாகக் கூறுகின்றார். வேறெவர் மிடற்றிற்கும் இயலாத இசை யாழுக்குமட்டும் எங்ஙனம் இயன்றிருக்கும்? இதனால், யாழ்முரிப்பண்ணைப் பாணர் யாழிலிட்டுக் காட்டமுடியாமை அவர் யாழ் வில்யாழொத்தது என்னும் போலியூகிப்பிற் கேதுவாகாமை பெறப்படும்.

மேற்காட்டிய காரணங்களின் உண்மையைப் படிப்போர் அறிதற்கு, அந்நிகழ்ச்சியைக் கூறும் பெரியபுராணச் செய்யுட்களை ஈண்டு காட்டுகின்றேன்.

"தருமபுரம் பெரும்பாணர் திருத்தாயர் பிறப்பிடமாம்
அதனூற் சார
வருமவர்தஞ் சுற்றத்தார் வந்ததிர்கொண் டடிவணங்கி
வாழ்த்தக் கண்டு
பெருமையுடைப் பெரும்பாணர் அவர்க்குரைப்பார் பின்னையார்
அருளிச் செய்த
அருமையுடைப் பதிகத்தாம் யாழினூற் பயிற்றும்பே
றருளிச் செய்தார்."

"கிளஞருமற் றதுகேட்டுக் கெழுவுதிருப் பதிகத்திற்
கிளர்ந்த வோசை
அளவுபெறக் கருவியில்நீர் அமைத்தியற்று மதனூலே
அகில மெல்லாம்
வளரிசை நிகழ்வதென விளம்புதலும் வளம்புகலி
மன்னர் பாதம்
உளம்நடுங்கிப் பணிந்துதிரு நீலகண்டப் பெரும்பாணர்
உணர்த்து கின்றார்."

"அலகில்திருப் பதிகஇசை அளவுபடா வகைஇவர்கள்
அன்றி யேயும்
உலகிலுளோ ருந்தெளிந்தங் குண்மையினை அறிந்துய்ய
உணர்த்தும் பண்பால்
பலர்புகழுந் திருப்பதிகம் பாடியரு ளப்பெற்றூல்
பண்பு நீடி
இலதுமிசை யாழின்கண் அடங்காமை யான்காட்டப்
பெறுவன் என்றார்."

"வேதநெறி வளர்ப்பவரும் விடையவர்முன் தொழுதுதிருப்
பதிகத் துண்மை
பூதலத்தோர் கண்டதும் கலத்தினிலும் நிலத்துநூல்
புகன்ற பேத
நாதஇசை முயற்சிகளால் அடங்காத வகைகாட்ட
நாட்டு கின்றார்
மாதர்மடப் பிடிபாடி வணங்கினர் வானவரும்
வணங்கி ஏத்த."

"வண்புகலி வேதியனர் மாதர்மடப் பிடிஎடுத்து
வனப்பிற் பாடிப்
பண்பயிலுந் திருக்கடைக்காப் புச்சாத்த அணைந்துபெரும்
பாண னேர்தாம்
நண்புடையாழ்க் கருவியினில் முன்புபோல் கைக்கொண்டு
நடத்தப் புக்கார்க்
கெண்பெருகும் அப்பதிகத் திசைநரம்பில் இடஅடங்கிற்
றில்லை யன்றே."

(தொடரும்)

தமிழ் நெடுங்கணக்கு - பெயரும் என்னையும்

[இராவ்சாகிப், சைவப்புலவர்,
டாக்டர், தி. இரா. அண்ணாமலைப்பிள்ளை,
L.C.P.S., L.M.S.S.A. Lond.]

(சிலம்பு--உசு, பரல்—கo ; ப. சசுரு தொடர்ச்சி)

தமிழ் நெடுங்கணக்கெழுத்துக்கள் ஒவ்வொன்றும், தாங் குறிக்கும் உள்ளீடான மறை பொருட்கேற்ப, தத்தம் வடிவங் களை யடைந்துள்ளன. இதை, மேற்கூறிய கட்டுரைப் பகுதி களில், ஒருவாறு தொகுத்துக் கூறியுள்ளோம். இனி, இக் குறிப்புக்கள், விரிந்த முறையில், பல தலைப்பின்கீழ் உறுதிப் படுத்தப்படும். இவ்வுரை, ஆராய்ச்சி முறையில் எழுதப்பட்ட தொன்றுகளின், அதிற் பொருட்குற்றம் காணப்படுவது இயல்பே யாகும் ; அவைகளைக் களைந்து குணத்ததையே நாடும்படி, இதைப் படிப்பவர்களைப் பன்முறை பணிந்து வேண்டுகின்றோம்.

தமிழ் நெடுங்கணக்கு

தமிழ் நெடுங்கணக்கு என்றால் என்ன ? 'நெடுங்கணக்கு' என்னும் பெயர் வருவதற்குக் காரணமும் உளதோ ? இதைப் பற்றிச் சிந்திப்பது முறைமையேயாகும். நம் நாட்டில், சிற்றூர் களில், அண்ணாவியார், திண்ணைப் பள்ளிக்கூடங்களில், இளஞ் சிறார்க்கு அரிச்சுவடி தொடங்கி, பாடங் கற்பிக்கும் பண்டைய முறையைக் காண்கிறோம். ஆனால், இன்றைய புதுமுறைப் பாடசாலைகளில், பள்ளிப்பிள்ளைகள், போலிச் சுயமரியாதை போர்த்து, ஆசிரியருக்கு வணக்கங்கூடச் செய்யாமல், மொழிக்கு முதலில் வாரா எழுத்துக்களில் ஒன்றாகிய டகரத்தை முதலாகவுடைய "டமாரம்" என்னும் வெற்றொலி கிளப்பு வது எத்தனை வேற்றுமை ? கேடென்ன வினையுமோ அறியோம்.

பண்டைநாட்களில், மாணவர்களுக்கு அரிச்சுவடி தொடங் குவதே ஒரு நற்சடங்காய்ப் பெற்றோர் நடத்துவர். பனையோலையை ஒழுங்குபடுத்தி மஞ்சள் தடவி, இறைவனை நினைந்து, தூபங் காட்டி, எழுத்தாணிகொண்டு, ஆசிரியர் நல்வாழ்த்துக் கூறி, மாணவன் கையைப்பிடித்து, அகர வரிசையை எழுதிக்காட்டி, திருக்கோயிலுக்குப் பள்ளிமாணவர் யாவரும் பெற்றோர் உள் படச் சென்று, ஞானசிரிய மூர்த்தியை வணங்கிவருவது நமது மரபேயாகும். ஓலைச்சுவடிகளில் எழுத்துக்களை எழுதுவது நம் நாட்டில் மட்டுமல்ல ; இத்தாலியா, கிரீசு, எகிப்து முதலிய நாடு களிலும், அக்காலத்தில் இருந்து வந்ததென்பது வரலாறு. தற்

காலத்தில் யாமெழுதும் காகிதம் (Paper) முதல்முதலில் Papyrus (Latin), Papuros (Greek) என்னும் ஒருவகைச் செடியினின்று உண்டாக்கப்பட்டதென்பது யாவரும் அறிந்ததே யாகும் தமிழ்நாட்டில் ஓலையில் எழுதும் பழக்கம் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்குக் குறைந்ததல்லவென்பது சங்கநூல்களினின்று நன்கு விளங்கும். பனையோலையை, இரண்டு மூன்று அடி நீளத்திலும், இரண்டு அங்குல அகலத்திலும் வகைப்படுத்தி, ஓலையின் மத்தியில் வட்டத்துவாரம் போட்டு, மஞ்சட் கயிற்றினாற் கட்டி, இடது பக்கத்திலிருந்து வலது பக்கமாயெழுதி, ஏடு தொடங்குவார்கள் முதல் ஏட்டில், முன் பக்கத்தில் பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் அகரத்திற் றொடங்கி ஆய்தத்தில் முடியும்; அதன் பின்பக்கத்தில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் எழுதப்படும். மெய்யெழுத்துக்கள், க, ங, ச, ஞ என்று உச்சரிக்கப்படுமேம தவிர, க், ங், ச், ஞ் என்று படிப்பதில்லை. மெய் யெழுத்துக்களை முதலிலேயே (க்) 'இக்கென்னு' என்று தொடங்குவது தமிழர் மரபல்ல; ககர வரிசை உயிர்மெய் யெழுத்துக்களைப் படிக்கும்பொழுதுதான் இறுதியாய், 'க்', கூட்டப்படும். புள்ளி பெற்ற ககரத்தைக் கொண்டு ககரவரிசை தொடங்குவது தவறு. இங்ஙனமாக, இருநூற்றுப் பதிறுறு உயிர்மெய் யெழுத்தின்பின்னர், னகரம் இறுதிஎற்றாய் நிற்கும். இந்த ஏட்டை "அரிச்சுவடி" என்றும் அழைப்பர். ஒன்று முதலிய எண்வரிசையை நெடுங்கணக்கென்றும், முந்திரி, காணிவரிசையைக் கீழ்க்கணக்கென்றுங் கூறுவாருமுளர்.

அரிச்சுவடி

ஆகவே, அரிச்சுவடியில், பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், பதினெட்டு மெய்யெழுத்துக்களும், இவைகளினிடையில் மூன்று புள்ளிகளாற் குறிக்கப்படும் சார்பெழுத்து மூன்றும், உயிர்மெய்யெழுத்து இருநூற்றுப் பதிறுறுமாக மொத்தம் இருநூற்று நாற்பத்தொன்பது எழுத்துக்கள். நேர்வரிசை பதினெட்டும், நிரையில் பன்னிரண்டுமாக, அணிவகுத்தாற் போல் நின்றிலங்குவது "நெடுங்கணக்கு" என்னும் திருப்பெயருக்குப் பொருத்தமே

ஆனால், பொதுவாய் முதலெழுத்துக்கள் முப்பதும், ஆய்தவெழுத்துஞ்சேர்ந்து நிற்பதுதான் 'நெடுங்கணக்கு' என்று கூறுவர். ஓலையில் நீட்ட நீட்டமாயெழுதுவதால் 'நெடுங்கணக்கு' எனப் பெயர் வந்தது என்பார்போலும்.

தமிழ் எழுத்துக்கள் இருநூற்றுநாற்பத்தொன்பதாயிற்றே யென்று மலைவாரும் மலைவிப்பாரும், இவை முழுவதும் அச்சி

டப்பட்ட அட்டவணை ஒன்றை உற்றுநோக்கல் வேண்டும். அபொழுது, கா, ஙா, சா, ஞா, என்று பதினெட்டு (ஆ) வரிசை உயிர்மெய்களும் ஒன்றுபோலிருப்பது நன்கு தென்படும. இங்ஙனமே மற்றைய உயிர்மெய்யெழுத்து வரிசைகளிலும் ஒற்றுமை காணப்படும். ஒரு சிறு மாறுதல்கள் உளவேனும், அவற்றை எளிதிற் பழகிவிடலாம்

கூர்ந்து நோக்குவார்க்கு, உயிரெழுத்துக்கள் பன்னிரண்டுக்குள்ளும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டுக்குள்ளும, பல ஒற்றுமை யுறுப்புக்கள புலனகும; இவைகளை முன்னர் விளக்குதும். இன்னும், நுணுகிநுணுகி ஆராய்வார்க்குக் காட்சியளிக்கும் புதுமை ஒன்றுண்டு. தமிழ் கற்கும் மாணவன், அடிப்படையாகத் தெரிந்துகொள்ளவேண்டிய உருவம் இரண்டேயாகும்; ஒன்று வட்டம ○, மற்றொன்று வரி —. இவ்விரண்டையும் எழுதத் தெரிந்துவிட்டால் எல்லாவெழுத்துக்களையும், ஒருசிறு முயற்சியோடு எழுதிவிடலாம். இதையும் தக்கசமயம் வந்துழி எடுத்துக்காட்டுவாம்.

நெடுங்கணக்கு—மூல ஒலித்தொகுதி

இம் மூப்பத்துமூன்று எழுத்துக்களும், மூல ஒலிகள் மூப்பத்துமூன்றைக் குறிப்பதென்பது முந்தியே சுட்டப்பட்டுள்ளது.

மொழிமுதற் காரணமாம் 'அணுத்திரள் ஒலி எழுத்து' என்பது எழுத்திலக்கணம் இக்கருத்தைத் தொல்காபபியா, நச்சினர்க்கினியர் போன்ற பல பேராசிரியர்கள் வற்புறுத்தியுள்ளார்கள. தமிழ்நெடுங்கணக்கில் ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு மூல ஒலியைக் குறிப்பதனற்றன், நுணுபுலமிகுந்த பெருங்கலைஞர் திருத்தகு, பா. வே மாணிக்கநாயகரவர்கள் (B.E., M C.I, Late Superintending Engineer, Madras) உலகில் நிலவும் எத்தகைய மொழியாயினும், அம்மொழியில் எழும் ஒலிகளனைத்தையும் தமிழில் உச்சரிக்கவும் எழுதவும் முடியுமென்ற உண்மையைப் பல மேடைகளிற் கண்கணங்கட்டி எடுத்துக்காட்டினர்கள். எல்லா ஒலிகளுக்கும் மூலமாகிய தனியொலிகட்கும் சார்பொலிகட்கும் குறியீடு அமைக்கப்பட்ட எழுத்தொலித்தொகுதியே 'தமிழ்நெடுங்கணக்கு' என்று கூறப்படுமாயின், அவ்விழுமிய பொருளைத்தரும் எழுத்தொலித் தொகுதியை 'நெடுங்கணக்கு' என்றழைப்பது மிகமிகப் பொருத்தம என்பதை அனுபவித்தறிதலே தகுதியாகும்.

மேலும் நெடுங்கணக் கெழுத்துக்கள், உயிர், உடல், சார்பு என்று பகுக்கப்பட்டுள்ளன. உயிருக்கும் உடலுக்கும் இடை

யில் மிடைவது சார்பெழுத்தாகையால், இவையிரண்டுக்கும் சார்பாயிருக்கும் பொருளையே அவை குறிக்கும். இவ்வுலகிற் காணும் பொருட்களில், உடல் அழிவது, உயிர் அழியாதது இறை (கடவுள்) இவைகள் அனைத்தையுங் கடந்துநின்று எங்கும் நிறைந்து இயக்குவது ; உலகுயிர்க்கெல்லாம் பற்றுக்கோடா யிருப்பது முழுமுதற் பொருளாகிய ஆண்டவன் இங்ஙன மாக, உயிர்கள், காட்சியிலும் உணர்ச்சியிலும் அறியும் பொருள் கள், இறை, உயிர், உலகம் இம்மூன்றினுள் அடங்கும். பல்லா யிரங்கோடி அண்டம் என்றழைக்கப்படும் உலகமே இறைவனது உடல் என்று கூறுவதும் நமது சமயக் கொள்கையே இம்மூன்று பொருள்களையும், குறியிலும், பொருளிலும், சுட்டிக்காட்டித் திகழ்வது ‘தமிழ்நெடுங்கணக்கு’ ஆயின், இத்திருப்பெயர் எத்தனை சிறப்புவாய்ந்துள்ளது !

ஆகவே, ‘தமிழ் நெடுங்கணக்கு’ என்னும் சொற்றொடர், முதல் சார்பாகிய முப்பத்துமூன்று எழுத்துக்களடங்கியதென்றும், தமிழ் எழுத்துக்கள் நீட்டத்தில் வரிசைவரிசையாய் எழுதப்படுகின்றமையானும், முப்பத்துமூன்று தனிச்சார்பு ஒலிகளுக்கு (கலப்பொலி தவிர்த்து) குறியீடாயமைந்திருப்பதானும், இறை, உயிர், உலகம் என்று யாங் காணும் மும்பொருளையுஞ், சுட்டிக் காட்டிக்கொண்டிருத்தலானும், அது ‘நெடுங் கணக்கு’ என்ற பெரும்பெயர்கொண்டு நிலவுகின்றதென்பது இங்கு எடுத்துரைக்கப்பட்டது.

இதன்பின்னர், ‘முப்பத்துமூன்று’ என்னும் எண், பண் டைக்காலத்திலிருந்தே தனிச்சிறப்புவாய்ந்து திகழ்ந்துவருகிற தென்பதையும், தமிழ்நெடுங்கணக்கு முப்பத்துமூன்றே என்று உறுதிப்படுத்துவதையும், அடுத்துவரும் பகுதிகளிற் சிந்திப் பாம். இவ் ஆராய்ச்சிக்குப் பயன்படக்கூடியவை பின்வருமாறு:

சங்க நூல்கள்	சமய நூல்கள்	விஞ்ஞானச்சான்றுகள்
1. தொல்காப்பியம்	1. பகவத் கீதை	1. மக்கள் வீணைத்தண்டு [அமைப்பு
2. திருமுருகாற்றுப் [படை	2. உபநிடதம்	2. யாழ் அமைப்பு
3. திருக்குறள்	3. மகாபாரதம்	3. திருக்கோயில் கொடி [மரம்
4. பரிபாடல்	4. தேவாரம்	4. உருத்திராக்கம் [அணிதல்
5. திருவாசகம்	5. திருமந்திரம்	5. புதைபொருள் இயல்பு
	6. கந்தபுராணம்	6. திருச்சபையார் பட்
	7. ஆழ்வார்கள் திருவாய்மொழி	டங்கள் (Theosophy)
	8. திருவிளையாடற் புராணம்	
	9. சிவஞானசுவாமிகள்	
	10. குமரகுருபரர்	
	11. அருணகிரிநாதர்	

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் உலகமுய்ய ஈந்தருளிய திருக்குறட்பா ஆயிரத்துமுந்நூற்றுமுப்பது; அதிகாரம் 133. ஆகவே, பதிகம் 133. இவர், தக்க காரணமின்றி, ஒரு சிறு சொல்லேனும் இணைப்பதில்லையென்பது திருக்குறட் பேராசிரியர்களின் கூற்று. உண்மையே உருவெடுத்த அத்தகைய பெரும்புலவர் பெருமானர், ஆயிரத்துமுந்நூற்றுமுப்பது என்னும் எண்ணையே தமது குறட்பாக்களுக்கு முடிபாகக் கொண்டுவழங்கியது அறிஞர்கள் சிந்திக்கத்தக்கது. நூறு, நூற்றொன்று என்னும் எண்களால், அளவிறந்த தன்மையைச் சுட்டிக்காட்டுவது தமிழுலகில் நிலவிய மரபாகும். சிற்றம்பல நாதரையே தமக்குத் துணையாகக்கொண்ட தூய்மைவாய்ந்த மாணிக்கவாசகப் பெருந்தகை, திருவண்டப்பகுதியில், "அண்டப்பகுதியின் உண்டைப்பிறக்கம், அளப்பருந்தன்மை....நூற்றொருகோடியின்மேற்பட விரிந்தன," என்ற திருவாக்கால் பேரண்டத்தின் அளவிறந்த பெருமையைக் கூறினின்றார். இதே கருத்திற்றான், வள்ளுவப்பெருமானர், நூறு குறட்பதிகங்களை எங்கும் நிறைந்த பரம்பொருளுக்கும் எஞ்சிய முப்பத்துமூன்று பதிகங்களை, முப்பத்துமுக்கோடி தேவர்களுக்குமாக 133 பதிகங்க ளடங்கிய 1330 குறட்பாக்களையும் உரிமைக்கொடையாக (Dedication) இறைவனுக்கு ஒப்பித்தாரென்று யாங்கோடும். இது எம் சிற்றறிவிற்கெட்டியது; தவறுயின் அறிவர் பொறுத்தருள்க. முப்பத்துமூன்று என்னும் எண்ணை நம்முன்னோர் தனிச்சிறப்புவாய்ந்த எண்ணாகக் கருதிவந்தன ரென்பதற்கு நம் நூல்களிற் பல சான்றுகள் மிளிர்கின்றன. அவற்றுள் முதன்மைபெறத் தகுதியுடைய ஒருசிலவற்றையே முன்னர் விளக்கிக்கூறுவாம் தமிழ்நெடுங்கணக்கு எழுத்துக்கள் முப்பத்துமூன்று என்பதை உறுதிப்படுத்துவதும் எங்கடனாகும்.

(தொடரும்)

பொங்கற் புதுநாள் வாழ்த்து

[செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை.]

சிந்தியல் வெண்பா

பொங்கலைப் போற்றுதும் பொங்கலைப் போற்றுதும்
அங்கண்மா ஞாலத் தினைத்துயிர்க் கும்நன்மை
தங்கியின் பேதருத லான். (க)

கொண்டலைப் போற்றுதும் கொண்டலைப் போற்றுதும்
தண்டுளி யீத்தென்றும் தாவில் உயிர்வாழ
மண்டிவான் வாழ்ந்துறுத லான். (உ)

ஆவினைக் காக்குதும் ஆவினைக் காக்குதும்
நாவிற் கினியநற் பாலொடு நல்லுணவும்
மேவுறத் தான்தருத லான். (ங)

யாட்டினைப் பெருக்குதும் யாட்டினைப் பெருக்குதும்
வேட்டவே ளாண்மை விளைய உரம்தந்து
தேட்டவினை யுள்ளாக்க லான். (ச)

வயலினை வாழ்த்துதும் வயலினை வாழ்த்துதும்
இயலுறு செந்நெலும் கன்னலுமே ஈத்து
வியலிடம் மேவுத லான். (ஞ)

நெல்லினை வாழ்த்துதும் நெல்லினை வாழ்த்துதும்
பல்லுயிர் வாழப் பதந்தந்து காத்திடும்
வல்லமை வாய்த்துறு லான் (ட)

கூலத்தை வாழ்த்துதும் கூலத்தை வாழ்த்துதும்
ஞாலத் துயிர்கட்கு நன்மை பலதந்து
சால வளர்ந்துறு லான். (ண)

மஞ்சளைப் பேணுதும் மஞ்சளைப் பேணுதும்
அஞ்சொல் மகளிர்க் கழகு நலங்கொடுத்து
விஞ்சுமேம் பாடெய்த லான். (அ)

மாமலர் ஏத்துதும் மாமலர் ஏத்துதும்
நாமநீர் வேலி உலகில்நன் மங்கலத்
தேதமிக வந்தமைத லான். (க)

நானிலம் போற்றுதும் நானிலம் போற்றுதும்
மான உயிர்வகைகள் வாழ இடந்தந்து
தானகத்தே தாங்க லான். (ஙி)

தேவாரமும் பண்ணும்

[தணிகைமணி, ராவ்பகதூர், திரு. V.S.செங்கல்வராய பிள்ளை, M.A.]

இசைப்பா வகையில் யாக்கப்பட்டு பண் அமைக்கப்பட்ட பாடல்களுள் காலத்தால் மூந்தியது 'பரிபாடல்' என்னும் நூல். கடைச் சங்கப் புலவர்கள் செந்தமிழுலகுக்குத் தந்த 'எட்டுத் தொகை'யுள் ஒன்று இப் பரிபாடல். பரிபாடலில் ஒவ்வொரு பாடலின் பின் பண்ணின் பெயரும் இசை வகுத்தோர் பெயரும் எழுதப்பட்டுள. ஆதலால் பரிபாடற் செய்யுட்கள் தேவாரம்போலவே சங்க காலத்தில் உரிய பண்களிற் பாடப்பெற்று வந்தன போலும் பின்னர், ஏழாம் நூற்றாண்டிலும் பின்னரும் வந்த தேவார ஆசிரியர்களாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் அவரவர் அருளிய பதிகங்களைப் பண்ணிசையுடன் பாடினர் அவர்கள் காலந்தொட்டு தேவாரப் பதிகங்கள் உரிய பண்களிற் பாடப்பட்டு வந்தன. சம்பந்தப் பெருமான் தாம் அருளிய பாடல்களைத் தாமே நல்ல இசையில் தமிழ்ப் பண்ணிற் பாடினர் என்பதைப் பின்வரும் அவர் வாக்கினின்றே நாம் அறியலாகும் :—

(i) ஞானசம்பந்தன் நல்ல தன்னிசையாற் சொன்னமாலை. i-5-11

(ii) நாடிய தமிழ்க்கிளவி யின்னிசை செய் ஞானசம்பந்தன். iii-79-11

(iii) காழியர் தந் தலைவன் பண்ணேழிசை பாடிய பத்தும். ii-23-11.

இங்ஙனம் அவர் பாடித் தலந்தோறும் இன்னிசையில் தமிழைப் பரப்பின சிறப்பை உணர்ந்தே, சுந்தரர்-" நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்." (VII-62-8) என வியந்தோதினர்.

2. கால வேகத்தினால் மூவர் அருளிய பண்முறை மறைந்தொழிய அவர்கள் காலத்துக்கு நானூறு ஆண்டுகளுக்குப் பின் வந்த சோழர்பிரான், இறைவன் திருவருளை நாடிச் சம்பந்தருடனிருந்து யாழ் வாசித்த திருநீலகண்ட யாழ்ப்பாணரது மரபில் வந்த நங்கை உதவியைக் கொண்டு, செல்லுண்டவை போக எஞ்சினின்ற தேவாரப் பாக்களுக்குப் பண்வகுத்தனன் என்று சரிதங் கூறும். அந்த அம்மையார் வகுத்துக் காட்டிய பண்முறையை அக்காலந் தொட்டுத் தேவார ஓதுவார்கள் தலைமுறை தலைமுறையாகப் பயின்று வந்தனர். அங்ஙனம் வகுத்து ஓதப்பட்ட பண்கள் மூவர் தேவாரத்திலும் இருபத்துமூன்று. இவையன்றி யாழ்மூரிப் பதிகம், திருநேரிசை, திருவிருத்தம், திருத்தாண்டகம், திருக்குறுந்தொகை என்பன தொன்றுதொட்டு ஒரு

குறித்த இராகத்திற் பாடப்பட்டு வந்தன. இன்ன பண்ணுக்கு இன்ன இராகம் என்பதைப் புலப்படுத்தும் பழம் பாடல் ஒன்று ஒரு தேசிகர் கூறக் கேட்டிருக்கின்றேன். 'ஞானபோதினி'ப் பத்திரிகையில் (ஏப்ரல்-1903) வந்த இதழ் ஒன்றில் பண்களுக்கு உரிய இராகங்கள் குறிக்கப்பட்டுள்ளன ; அவை பின்வருமாறு:-

பகற்பண்	இராப்பண்
1. புறநீர்மை—பூபாளம்	13. தக்கராகம்—காம்போதி
2. காந்தாரம்—நவரோசு	14. பழந்தக்கராகம்—ஆரபி
3. பியந்தைக் காந்தாரம்—நவ	15. சீகாமரம்—நாதநாமக்கிரியை
4. கௌசிகம் - பைரவி [ரோசு	16. கொல்லி—கேதாரம்
5. இந்தளம்—நாதநாமக்கிரியை	17. கொல்லிக்கௌவாணம்
6. தக்கேசி—காம்போதி	—நவரோசு
7. சாதாரி—பந்துவராளி	18. வியாழக்குறிஞ்சி— சௌராஷ்டிரம்
8. நட்டபாடை—நாட்டை	
9. நட்டராகம்—பந்துவராளி	19. மேகராகக்குறிஞ்சி-நீலாம்பரி
10. பழம்பஞ்சுரம்—சங்கராப	20. அந்தாளிக் குறிஞ்சி—சாமா
ரணம்	21. குறிஞ்சி—குறிஞ்சி
11. காந்தார பஞ்சமம்—கேதார	பொதுப்பண்
கௌளம்	22. செவ்வழி-யதுகுலகாம்போதி
12. பஞ்சமம்—ஆகிரி	23. செந்துருத்தி—மத்யமாவதி.

மேற்காட்டிய பண்களன்றி, யாழ்மூரிப் பதிகம் அடாணை யிலும், திருநேரிசை நவரோசிலும், திருவிருத்தம் பைரவியிலும் திருக்குறுந்தொகை நாதநாமக்கிரியையிலும், திருத்தாண்டகம் ஹரி காம்போதி, கமாசிலும் பாடப்பட்டு வந்தன. புதியன புகும் முறையாலே, பழந்தக்கராகம்—தேவகாந்தாரத்திலும், குறிஞ்சி—சுருட்டியிலும், ஆரபியிலும், சீகாமரம், பஞ்சமம்—புன்னாகவராளியிலும், காந்தாரம் — சங்கராபரணத்திலும், கொல்லி—நவரோசிலும், திருவிருத்தம்—தோடியிலும், பின்னும் பலவகையாகவும் பாடப்பட்டு வருகின்றன.

மேற்காட்டிய இருபத்து மூன்று பண்களுள் செந்துருத்திப் பண் தவிர ஏனைய இருபத்திரண்டு பண்களைச் சம்பந்தர் தேவாரத்திலேயே காணலாம். இங்ஙனம் பண்களையே நிரம்பப் பாடிய காரணத்தால் சம்பந்தமூர்த்தியை அப்பர் பெருமான் தமது பாடலில் "பண் மலிந்த மொழியவர்" (VI. 58-1) என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

வண்டும் பண்ணும்

3. இயற்கை ஒலிகளிலெல்லாம் சம்பந்தர் பண்ணினைசைகளைக் கேட்டு மகிழ்ந்தார் ; பாராட்டினர். மலர்த்தேனை உண்டு களித்துப்பாடும் வண்டுகளின் ஒலியிற் பல பண்களைக் கேட்டுக்

களிப்புற்றார்; தமது பாடலிற் சிறப்பித்தார். அவை தம்முள் சில எண்டெடுத்துக் காட்டுவாம்:

(i) மலைவளஞ் செறிந்த திருக்குற்றாலத்தைக் கண்டு வழி பட்டபோது அங்கே மலைச்சாரலில் வண்டு தன் பெடையைப் புல்லிக் குருந்த மரத்திலிருந்து பண் செவ்வழி (யதுகுல காம்போதி)யைப் பாடினதைக் கேட்டுப் பாராட்டுகின்றார்:—

"பெருந்தண் சாரல் வாழ்சிறை வண்டு பெடைபுல்லிக்
குருந்தம் ஏறிச் செவ்வழி பாடுங் குற்றாலம்." (I. 99—10)

(ii) திருவீழிமிழலை என்னுந் தலத்தை வழிபட்டபோது அங்கே மடுவில் வண்டு செங்கழுநீர்ப்பூவின் மகரந்தப் பொடிகளிற் படிந்து மது உண்டு, தன் நிறம் சிவந்து, தன் உருவம் மாறி, செவ்வழிப் பண்ணைப் பாடிற்று என்கின்றார்:—

"சேறுடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு
வேறுய உருவாகிச் செவ்வழிநற் பண்பாடும் மிழலை யாமே." (I. 132—7)

(iii) சீகாழியிற் சோலைகளில் வண்டு பண் சீகாமரத்தை இசைத்தன என்கின்றார்:—

"காரடைந்த சோலை சூழ்ந்து காமரம் வண்டிசைப்ப." (I. 47—3)
(காமரம்—சீகாமரம்—சிறுபாணாற்றுப்படை—77-உரை)

(iv) திருப்பைஞ்ஞீலி என்னும் தலத்தில் மலர்த்தேனை நிரம்ப உண்டு வண்டுகள் பண் பஞ்சுரம் (பழம்பஞ்சுரம்) பாடின என்கின்றார்:—

(பஞ்சுரம் பழம் பஞ்சுரமாகும்—பிங்கல நிகண்டு)

"அஞ்சுரும்பு அணி மலரமுதம் மாந்தித் தேன்
பஞ்சுரம் பயிற்று பைஞ்ஞீலி," (III-14-3.)

(v) சில வண்டுகள் குறிஞ்சியாழ்த்திறன் வகையிற்பட்ட "மருள்" பாடினவாம்:—

"வண்டு மருள் பாட" (I. 46—1.)

(vi) சில வண்டுகள் நேரிசைப் பண் பாடின என்கின்றார்:-

"நேரிசையாக அறுபதம் முரன்று" (I. 75—3.)

(vii) சில வண்டுகள் துத்தம் என்னும் இசையில் பண் பாடினவாம்.

"வண்டினம் துத்த நின்று பண் செயும்
சூழ் பொழில் திருத்தி" (II-98-0)

(viii) சில வண்டுகள் "செந்து" என்னும் இசை பாடினவாம்.

(செந்து—பெரும்பண்ணின் வகை—பிங்கலம்)
"குளிர்வண்டு செந்திசைபாடும்" (I-101-2)

(ix) சில வண்டுகள் பண்பாடி ஆடவும் ஆடினவாம்.

"பண்கொண்ட வண்டினம் பாடியாடும்" (III-104-1)

குயிலும் இசையும்

4. குயில்களின் இன்னிசைப் பண்ணையும்கேட்டு மகிழ்கின்றார் சம்பந்தர்.

"குயில் இன்னிசைபாடுங் குளிர்சோலை" (I-14-2)

மாதர்களும் பண்ணும்

5 (i) பெண்களின் மொழியே *குறிஞ்சிப் பண்ணுக்குப் புறம் ஆகிய 'செந்து' என்பதை ஒக்கும் என்கின்றார்.

"செந்து சேர் மொழியார்" (II-51-11)

(ii) சம்பந்தர் காலத்தில் பெண்கள் அருமையான பண்களிற் பாடவும் பாடினர், பாடலுக்கு ஒத்தவண்ணம் வீதியில் அரங்கு அமைத்து ஆடவும் ஆடினர்—என்பர்.

"காந்தாரம் இசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவிஞர் வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே." (I-130-6)
(காந்தாரப் பண்—நவரோசு ராகம்)

இராவணனும் பண்ணும்

6. தமது இருப்பிடமாகிய மலையை அசைத்த இராவணனைக் கால்விரலால் ஊன்றி அழுத்திய இறைவர் இராவணன் பண்ணுடன் பாடக்கேட்டு அவனுக்கு அருளினராம்:

"வல்லரக்கன்...பண்ணின் பாடல் கைந் நரம்பாற் பாடிய
பாடலைக் கேட்டு அண்ணலாய் அருள் செய்த அடிகள்" (II-95-8)

அடியார்களும் பண்ணும்

7. சம்பந்தர் காலத்தில் அடியார்கள் பண்ணுடன் இசை பாடி வழிபட்டனர்.

"பண்ணென்ற இசைபாடும் அடியார்கள்" (II-43-8)

இறைவனும் பண்ணும்

8. (1) இறைவனே காந்தாரப் பண்பாடிச் செல்வாராம்.

"காந்தாரம் தாம் முரலாப்போகா நிற்க" (VI-9-2)

(2) வானவரும் பண்பாடி இறைவனை வணங்குவர்.

"பண்ணின் இசைமொழி பாடிய வானவர் தாம் பணிவார்" (IV-90-6)

---

* இவ்வதிகாரம் பக்கம்—384

(3) "பாலை யாழொடு செவ்வழி பண்கொள
மாலை வானவர் வந்து வழிபடும்." (V-12-10)

9. இனித் தேவாரம் ஓதும் முறையைக் கூறுவாம் :

(1) இசையுடன் பண்ணுடன் ஓதவேண்டும்; இசைபாட வல்லவர்கள் பாட, ஆசையுடன் கேட்டு மகிழ்தல் வேண்டும் :

"பண்ணுரப் பாடவல்லார்க் கில்லை பாவமே" (II-16-11)
"ஆதரித்து இசை கற்று வல்லார் சொலக்கேட்டு உகந்தவர்" (II-106-11)

(2) பயனளிக்கவல்ல பண்ணுடன் பாடவேண்டும் :

"பண்பயன் கொளப் பாடவல்லவர்
விண்பயன் கொளும் வேட்கை யாளரே" (II-26-11)

(3) இசைஞானம் இல்லாதவர்கள் அவர்களுக்குக் கூடிய இசையிலோ வாய்ந்தவாறே எங்ஙனம் ஓதினாலும் இறைவர் மகிழ்வார் :

"கோணை மிடறுக கவிகோளும் இலவாக
இசைகூடும் வகையால்
எழையடி யாரவர்கள்
யாவை சொன சொல்மகிழும் ஈசன்" (III-71-1)
"இசைகூர வந்தவணம் ஏத்துமவர் வானமுடையாரே" (II-29-11)
"ஞானசம்பந்தன் சொல் வாய்ந்தவா றேத்து
வார் வானுல காளவாரே"— (II-15-11)

இங்ஙனம் கூறியிருந்தும் பாடலுக்கு உரிய பண்ணிற் பாடுதலே நீதி என்றும், அவ்வப் பண்ணுக்கு வழங்கும் இசை எதுவோ அந்த இசையிற் பாடுக என்றும், தெளிவு பெறச் சம்பந்தர் கட்டளையிட்டுள்ளார்.

"தமிழ்கெழுவிரகினன் ஓதிய ஒருபதும்
உரியதொ ரிசைகொள உரைசெயும் நீதியார்"— (III-84-11)
"ஞானசம்பந்தன் சமைத்த பாடல் வழங்கும்இசை
கூடும்வகை பாடுமவர் நீடுலக மாள்வார்"— (I-131-11)

இதுபற்றியன்றே உரியபண் இன்னதென ஆராயச் சோழர் பிரான் நீலகண்ட யாழ்ப்பாணரின் வழிவந்த நங்கையின் உதவியைத் தேடிப்பிடித்தான். இது பற்றியன்றே 'தேவாரப் பண் ஆராய்ச்சி,' என்ற இயக்கம் இன்று பெரியோரால் எழுந்துளது! 'உரிய இசையில் உரைத்தலே நீதி,' என்று சம்பந்தப்பெருமானே கூறியுள்ளதால் அந்நீதியைக் கடைப்பிடிப்போமாக.

குறிப்பு: தேவாரத்தில் இல்லாத பண் ஒன்று திருவிசைப்பாவில் உள்ளது. அது "சாளரபாணி". அதையும் ஆய்தல் நன்றும்.

பொங்குக பொங்கல்!

[முத்தமிழ்மணி]

1. புதுமைமணம் கமழ்ந்திடவே பொங்குக பொங்கல்!
புன்மையாவும் கலைந்திடவே பொங்குக பொங்கல்!
மதுரமான தமிழார்நாட்டில் பொங்குக பொங்கல்!
மாற்றுணக் கில்லையிடம் பொங்குக பொங்கல்!

2. ஒற்றுமை வளர்ந்திடவே பொங்குக பொங்கல்!
ஓங்கும் தமிழ்செழிக்க பொங்குக பொங்கல்!
வற்றுவளம் பெறவே பொங்குக பொங்கல்!
வண்மைத் தமிழ்வள பொங்குக பொங்கல்!

3. வீடுநாடு எங்குமின்று பொங்குக பொங்கல்!
வேற்றுமைகள் நீத்திடவே பொங்குக பொங்கல்!
காடுவயல் திருத்திடவே பொங்குக பொங்கல்!
காலமெல்லாம் பயன்பெறவே பொங்குக பொங்கல்!

4. கலைபலவும் கற்றிடவே பொங்குக பொங்கல்!
காதலர்உள் ளம்மகிழப் பொங்குக பொங்கல்!
விலையறியா உழைப்புமிகப் பொங்குக பொங்கல்!
விளைபுலங்கள் வளம்பெறவே பொங்குக பொங்கல்!

5. உரிமைத்தமிழ் மக்கள்வாழப் பொங்குக பொங்கல்!
உலகமெலா மினிதிலங்கப் பொங்குக பொங்கல்!
அரியபே றுடையமக்கள் பொங்குக பொங்கல்!
அறிவுஆண்மை ஆற்றல்பெற பொங்குக பொங்கல்!

திருப்பாவை ஆராய்ச்சி

[பேராசிரியர், கா. ர. கோவிந்தராச முதலியார்]

(நிலம்பு, உசு, பரல் கூ, பக்கம் உகஉ தொடர்ச்சி)

கோதை நாய்ச்சியார், பெரியாழ்வாருக்குத் திருமகளாராய் அவதரித்து, ஞான பத்தியோடே வளர்ந்து, ஒரு கொழு கொம்பிலே சேர்க்கவேண்டிய பருவம் அடைந்தனர். அப் போது 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'* என்னும் உறுதி உடையவராய்,

"கோல்தேடி ஓடுங் கொழுந்தே போன்றதே
மால்தேடி ஓடு மனம்."†

என்றபடி செங்கணெடியோன்பாற் செறிந்த உள்ளத்தினராய், அக்கருவுடை முகில்வண்ணன் காயாவண்ணன் திருவுரு முகத்துத் திருக்கண்களால் திருந்தருள் நோக்குப் பெறுதலே விழைந்து, அஃதோராற்றானும் கிட்டப் பெறுமையான் ஆற்றாது வருந்துவா ராயினர்.

செந்தண்மை பூண்டோர் சிலர், அது கண்டு நாய்ச்சியாரை நோக்கி, "அன்னாய்! ஆய்ப்பாடியில் ஆயர்சிறுமியர் கண்ணனேடு சூரணை கோத்து, அதனாற் களிப்பு மிக்கவ ராயினர். கண்ணன் அதனையுணர்ந்தருளி 'இம்மீக்களிப்பு இவ்வாறே செல்லின், இச் சிறுமியர்க்குத், துன்பமுண்டாம்; ஆதலின், இதனை நாம் மாற்றுதல் வேண்டும்,' என்று திருவுளங்கொண்டு, அவர்களைப் பிரிந்து ஒளித்தருளினன். கண்ணன் பிரிவை ஆற்றுத அச்சிறுமியர் தங்களுள் ஒருத்தியைத் 'தீயகாளியனே!' என்று விளித்தும், ஒருத்தி 'நான் கண்ணன்' என்று சொல்லியும் ஒரு வாறு தங்கள் ஆற்றுமை தணியப் பெற்றார்கள்," என்று கூறக் கோதை நாய்ச்சியார், தாமும் அவர்களைப்போல் தம் ஆற்றுமையைத் தணித்துக்கொள்ளுதற்குரிய வழியை உன்னித் திருப்பாவை பாடினர் என்பது.‡

திருப்பாவையிற் கூறப்படும் பொருளின் தோற்றுவாய்

திருமகளார்தம் கேள்வனுகிய பெருமாள் தீயோரை அழித்து, நல்லோரைக் காத்து, அறத்தை வளர்த்துத், தன்னையன்றிப் பிறிதான்றையும் வேண்டாத அடியவர்கட்கு அந்தமில் இன்பத் தழிவில் வீட்டை யருளுதற்பொருட்டு ஆதியஞ்சோதி

---

* நாய்ச்சியார் திருமொழி, 1-ம் திருமொ. பா. 5.

† இயற்பா, 2-ம் திருவந்தாதி, பா. 27.

‡ இது பரம காருணியரும், திருப்பாவைக்கு மூவாயிரப்படி வியாக்கியானம் அருளிச்செய்தவருமாகிய பெரியவாச்சான் பிள்ளை, அந்த வியாக்கியானத்தில் எழுதிய அவதாரிகையினைத் தழுவி எழுதப்பட்டதாகும்.

உருவை அங்கு வைத்து, இங்குத் திருவாய்ப்பாடியில் கண்ணனுய் அவதரித்து, ஒப்புயர்வற்ற தன் அழகினாலும் அரிய குணஞ் செயல்களாலும் ஆயர்தம் சிறுமியர்களின் மனங்களைக் கவர்ந்துகொண்டு, மின்னற் கொடிகளுடன் வளரும் கார்முகில் என அவர்களோடு வளர்ந்து வந்தனன்.

அங்ஙனம் கண்ணனோடு வளர்ந்துவந்த ஆயர்தம் சிறுமியர்கள் மங்கைப் பருவம் எய்தியபோது முதியவர்களாகிய ஆயர்கள், 'கண்ணன் தூர்த்தனு யிரான்றான்; அவன் முகத்திலே பெண்கள் விழிக்கலாகாது,' என்று தமக்குள் முடிவு செய்துகொண்டு, அப்பெண்களை வெளியிற் செல்லாதபடி இல்லிற் செறித்தார்கள். அதன் பின்னர் அச்சிறுமியர்களின் நல்வினைப் பயனால் மழைபொழியாதொழிய, அம்முதியர்கள், எல்லாருந் திரண்டு, 'ஆனிரைகளும், மாந்தர்களும் பிழைத்தற்குரிய விரகு யாது?' என்று ஆய்ந்து, 'கண்ணனைக் கடகணுக அமைத்து, இவ்வூரின்கண் உள்ள பெண்கள் அனைய நோற்கச்செய்யின், மழை உண்டாம்,' என்று முடிவு செய்து, அப்பெண்கள் எல்லாரையும் அழைத்துக் கண்ணனையும் அழைத்துப் பெண்களை நோற்கச் சொல்லி, 'நீ, இவர்கள் நோன்புக்கு வேண்டுவன செய்து தருபவன் ஆதல்வேண்டும்,' என்று கண்ணனை வேண்டக், கண்ணன், 'இஃதென்னால் இயல்வதன்று,' என மறுக்க, அம்முதியவர்கள் 'நீ இதனைச் செய்தல்வேண்டும்,' என வற்புறுத்தினராகக், கண்ணனும் அதற்கிசைந்தனன். பின்பு அம்முதியவர்கள் யாவரும் ஒருங்குதிரண்டு, கண்ணன் கையிற் பெண்களைக் காட்டிக்கொடுத்துச் சென்றார்கள் பின்னர்க் கண்ணன் அவ்வாயர் சிறுமியர்களோடு சிறிதுநேரங் களிகூர இருந்து பின்பு, அப்பொற்பாவையரை நோக்கிப், "பெண்காள்! திருக்குரவை கோத்த இரவுபோல இவ்விரவும் நமக்கு நல்லிரவாயிற்று. பிறர்க்கு ஐயுறவு பிறக்கும்படி நெடும்போது நாம், இங்ஙனம் இருத்தலாகாது. நீங்கள் யாவரும் இப்போது சென்று, நள்ளிரவில் வந்து என்னை எழுப்புங்கள், நோன்புக்குக் குளிக்கலாம்படி," என்று கூறிப் பெண்களைப் பிரிந்துபோய், நப்பின்னைப் பிராட்டியின் திருமாளிகையிலே புக்கான். அப்பாவையரும் அவ்வாறே சென்று தத்தம் மாளிகைகளை அடைந்தார்கள்.

திருப்பாவையிற் கூறப்படும் பொருள்

பிறகு அவ்வாயர் சிறுமிகளுள், உறங்கப் புக்க விடத்தில் கண்ணுறங்காமையாலே முற்பட எழுந்தவர்கள், கூடிச் சென்று, கண்ணனுடைய குணஞ் செயல்களை நினைத்து, எழுந்திருக்க மாட்டாதே அணையிற் கிடப்பவர்களைத் தனித்தனியாக எழுப்பி,

யாவருந் திரண்டு, தாங்கள் செல்லக் கருதிய நந்தகோபர்தம் திருமாளிகையை அடைந்து கண்ணனை எழுப்பித் தாங்கள் விழைந்ததைக் கண்ணனுக்கு அறிவித்து, வேண்டிப் பெற்று, நோன்பை முடித்தார்கள் என்பது.

ஈண்டுக் கவனித்தற்குரிய செய்தி ஒன்றுண்டு. அது முதிய வர்களாம் ஆயர்கள் கூறியபடி 'மழை பெய்தல் வேண்டும்' என்பதை வெளிப்படையாகவும், 'கண்ணனை அடைதல் வேண்டும்' என்பதைத் தம் முள்ளக் கிடையாகவுங் கொண்டு ஆயர் சிறுமியர்கள் நோற்றார்கள் என்பதே. அதனைத் திருப்பாவையில்,

"ஆழிமழைக் கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ வுலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்"

எனவும்,

"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்ற மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றமேய்த் துண்ணுங் குலத்திற் பிறந்துநீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோடு
உற்றோமே யாவோ முனக்கேநா மாட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்."

(திருப்பாவை: பாசுரம் ச, உக.)

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்ததாகிய திருவெம்பாவையில்,

"முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்."

எனவும்,

"உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்று நாணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்."

(திருவெம்பாவை : ஙசு, ஙக.)

எனவும் வரும் திருப்பாடல்களையும் ஈண்டு நோக்குக.

திருப்பாவை என்னும் தொடர் இலக்கணம்

திருப்பாவை என்னுந் தொடரில் திரு என்பது, அடை மொழி. இது, செல்வம், இலக்குமி, அழகு, மேன்மை என்பன முதலிய பல பொருள்களைத் தருஞ் சொல்லாகும். இஃது ஈண்டு மேன்மை என்னும் பொருளதாய் நின்றது. பாவை என்பது பதுமை என்னும் பொருளது. இங்ஙனமாகிய இவ்விரு சொற் களுங் கூடிய இத்தொடர்மொழி, மேன்மையாகிய பாவை என் றுதலின், பண்புத்தொகைநிலைத் தொடராம் என்பது. இத் தொடரில் பாவை என்பது உவமையாகு பெயராய்ப் பெண்களை உணர்த்த, அது பொருளாகுபெயராய்ப் பெண்களால் நோற்கப் படும் நோன்பை உணர்த்த, அது, காரியவாகு பெயராய் அந் நோன்பைத் தெரிவிக்கும் நூலை உணர்த்தி நின்றது. ஆதலின், இது மும்மடியாகு பெயர்.

இனிப் "பாவை என்பது இருமடியாகு பெயராய் நோன்பை யுணர்த்த அது, திரு என்பதனோடு கூடி மேன்மையாகிய நோன்பை உணர்த்தும் நூல் என்னும் பொருளதாயிற்று எனக் கொண்டு அதனை அன்மொழித்தொகைப் பெயர் என்று கூற லாகாதோ?" எனின்,

'திருவாடல் பாவை யதற்குறுப்புத் தோறின்
ஒருவா திரண்டுட னென்று'

எனவும்,

'செருவெங் கோல மவுணர் நீங்கத்
திருவின் செய்யோ னாடிய பாவையும்'

எனவுங் கூறியவற்றுள், பாவை என்பது அடைமொழியின்றி நின்றே நூலை உணர்த்தலின், மும்மடியாகு பெயரென்றே கூறு தல் வேண்டும்; அதற்கு மாறாக ஈண்டு இருமடியாகு பெயர்க்கு மேல் வந்த அன்மொழித்தொகைப் பெயர் என்றல் மாறு கொளக் கூறலாம் என்க.

(தொடரும்)

ஆண்மைச் சர்தார்

(உகசு-ம் பக்கத்தொடர்ச்சி)

காந்தியடிகள் "சர்தார் பார்வைக்கு வன்மையாளராகத் தோன்றினும் உள்ளம் தாய்மையினும் மென்மை படைத்தது. தலைவர் மாட்டுத் தக்கவாறு நடந்துகொள்ளு முறையில் சர்தாரே மிக்கவர்; தமக்குத் தாமே ஒப்பவர். மேலும் தொண்டு பூண்டொழுகுவதில் அன்னையினும் அன்புடையர். சிறையில் எனக்கு அன்னையிலாக் குறையைப் போக்கிப் பணிபுரிந்தனர். நாடே தம்முயிர், நாட்டு நலனே தம்நலன் என மெய்ம்மையாகக் கொண்டொழுகும் செம்மையர்," என்று கூறிய செம்மொழிகளெல்லாம் குறுநில இணைப்பில் மிக்க விளக்கமுற்றன.

குறுநில மன்னர் எவரையும் வற்புறுத்தவில்லை. அவர் தாமே வலிந்து இணங்கும்படி சர்தார் தம் வாய்மொழி வன்மையாலேயே ஆக்கினர். அறிவுரு, ஆராய்ந்த கல்வி, கண்ணோட்டம், காலமும் இடனுமறிந்து, தக்கவற்றை எண்ணியுரைத்தல், மன்னவர்க்கு உறுதியுண்டாம் வாய்மை காட்டல் முதலிய தொன்னெறி மாண்புகளால் கிட்டத்தட்ட அறுநூற்றுக்கு நெருங்கிய குறுநிலங்களை ஓராண்டுக்குள் உலகு வியக்க ஒற்றுமை யாக்கினர். இச்செயற்கருஞ் செயலால் நாவலந்தீவாம் நங்கை ஒருவனுக்கு ஒருத்தி போன்று தன் உண்மையான ஒரு தலைவன் தன்பால் நீங்காதுறையும் நேர்மை பெற்று நெடுதுளம் பூத்தனள். இந்நலவு பண்டு அசோகரால், அக்பரால் கனவு கண்டு கைநழுவவிட்டது. எனினும் அவர்கட்குமுன் ஒரு மொழி வைத்தலகாண்ட தொன்மைத் தமிழ் முடிமன்னரால் நனவாக்கி நாட்டியதொன்றே. காலவேறுபாட்டால் பரத்தையில் பிரிந்த தலைவன் போன்று ஆட்சி குறுநில மன்னர்பால் மறுநில மன்னர்பால் குறுகுவதாயிற்று. அவ்வாட்சியை மீண்டும் தலைவிபாற் சேர்க்கும் தனிப்பாங்கன் ஒத்துச் சர்தார் அமைந்தனர்; சேர்த்தனர்; தலைவியாம் இந்திய நங்கையும் தன்னிகரின்றி வாழ்கின்றனள். இஃதோர் அகப்பொருட் செயலே போலும்.* இதனால் சர்தார் புகழ் பாரத வரலாற்றில் தக்க இடம் பெற்று மிளிர்வது போன்று பரந்து பட்ட உலகப் பண்பாளர் உள்ளத்தும் ஒளிரும் என்பது திண்ணம்.

---

* ஆட்சியாம் நாவல் வேந்தன் அன்னவள் மனம்புண் ணுக
மீட்சியில் ஆறு நூறு மினுக்கியாம் குறும்பர் தம்பால்
தாட்சியில் மூழ்கி அசோகர் அக்பர்தாம் செய்யா மீட்டை
மூட்சியில் செய்தான் சர்தார் முதுக்குறைப் பாங்கன் ஒத்தே

இவர்தம் அருமைத் தமையனார் வித்தல்பாய் படேல் நாட்டுக்கு உழைத்துத் தேட்டமெலாம் நாட்டுக்கே ஈந்து, சட்டப் பெருமன்றத் தலைவராயிருந்து மூட்டின்றி நடத்திய முதல் இந்தியர் என்னும் முதன்மையும் பெற்று, வெளிநாடு சென்று நம் நாட்டியல்புரைத்து அஞ்சா வெள்ளையரும் அஞ்சும்படி செய்து அறவுரையால் உயிர்கொடுத்துப் புகழ் பூண்டனர் அண்மையில் (2—1—51) நம்நாட்டுத் தலைவர் ராஜேந்திரப் பிரசாதால் நிறுவப பெற்ற வெண்கலப் புகழுருவாய்ப் பாபாய் நகரில் விளங்கு கின்றனர் இவ்விருவாகளும் நம்நாட்டுப் "புண்ணியக்கண் இரண்டெனப" பொன்றுப் புகழுடன் பொலிவர்.

தாழ்வில் செய்தி

"நாட்டின் விடுதலபோரில் காட்டிய மிகச்சிறந்த தனிழப்பு (தியாகம்) பிறர்க்கென முயறல், ஒப்புயர்வற்ற கட்டுப்பாடு, ஈடும் எடுப்பும் இல்லா ஒற்றுமை யுணர்ச்சி ஆகியவைகளையும் இந்நாளிலுள்ள அறச்சிதைவையும் ஒப்பிட்டுப் பாருங்கள் ஒவ்வொருவனும் தான் சரியாக நடந்துகொள்கின்றனை என்று பார்த்துத் திருந்தட்டும. சிறிய செய்திகளில பெரிய ஆய்வு வேண்டா. முதன்மையானவறறில் ஊகமின்மை உதவாது; அவரவர் கடமையை அவரவர் அகம் புறந்தூய்மையுடன செய்க நம்மை முன்னுக்குக் கொண்டுவந்தது கண்ணமபிக்கையே. அதை மீண்டும அடைந்தால் நாட்டின் எதிர்காலசகபபற்றிக் கவலையே இல்லை," என்பதே உறுதியும இறுதியுமாகிய அறவுரை

மக்களன்பு

நாவலம் தீவாம் நம் நாடு விடுதலை பெற்ற ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பதது ஏழு ஆகஸ்டு பதினைந்தாம் நாள் தொட்டு ஆற்றிய தொண்டோ அளபபில சாதார் பொறுப்போ சிக்கல் வாய்ந்தது, சிறுமை நிறைந்தது, பொறுமை வாய்ந்தார் செய்து முடிக்கும பொற்பினது சாதார் தூணையமைச்சராய், உள்நாட்டுத் துறையினராய் குறுநில மன்னாக்குத் திருமிகு காவலராய்த் திகழ்ந்தனர். எல்லாம் நன்றுமாறு நோக்காலும் சொல்லும் நுண்ணுணர்வாலும் எண்ணமையின் முடித்தனர். ஏழு பத்து நான்காம பிறப்பை யொட்டிப் பமபாய் நகர மக்கள் நூறுயிரம் கொண்ட செம்பொன்றுல் அசோக உச்சி (தூபி) என்னும் அடையாளம் கையுறையாக அளித்தனர்.

குஜராத்தி மக்கள் அவர் பெயரால் அவர் பிறந்த கரம்சந்த் என்னும் ஊர் அருகே கலைநகர் ஒன்று நின்று நிலவ அமைக்க வேண்டுவ செய்துள்ளனர். அதற்கு அடிப்படைக்கல் பண்டித

நேரு அவர்கள் திருக்கையால் நாட்டப் பெற்றது. இது, 'வல்லப நகர்' என்னும் திருப்பெயரால் வழங்கும். சைவவுணவும் துறவு வாழ்க்கையும் சர்தாரின் சால்பு.

பல்கலைக் கழகங்கள் ஒன்றோடொன்று போட்டியிட்டு 'டாக்டர்' பட்டம் வழங்கின. அவை நாகபுரி, காசி, அலகாபாத், இலட்சுமணபுரி, உஸ்மானியா, கிழக்குப் பஞ்சாப் முதலியன.

" அடிகளுடன் சர்தார் அறமுறைசேர் கண்ணன்
படியில் அருச்சுன னென்ப."

பொன்றுப்புகழுடல்

'உளதாம் சாக்காடு' ஒருவர்க்கு எய்துதல் சாலவும் அரிது. தாளாண்மையும் வேளாண்மையும் ஒருங்கமைந்த சான்றோர் பிரிவு மனைமய்து பொய்ப்பும், வலியது தடையும், ஞாயிற்றது மறைவும போன்று முழு உலகத்தையும் கழிவில் துன்பக் குழியில் வீழ்த்தும் என்பது 15—12—1950-இல் காணப் பெற்றது. என்னே! காலக்கொடுமை. நிறைநாள் வாழ நினைநததும் தன் பொருட்டன்று; நாட்டின் பொருட்டு. அத்தகைய சர்தாரையும் காலன் கைக்கொண்டனன். டில்லியி லிருந்து மூன்று நாட்களுக்குமுன் நோய் நீக்கத்தின் பொருட்டு பமபாய் நகர் வந்து சேர்ந்தனர். சிறிது கலம் பெற்று மீள்வார் என்று எல்லோரும் நம்பினர். பின் 15—12—50 வெள்ளி காலை மணி 9-37-க்குத் திடீரென மறைவெய்தினர். மணிபென் தாயாபாய் என்ற மக்களிருவரும் பிறரும் இருந்து உற்றுழி உதவி நற்றுணை நின்று புரிந்தனர். கீதை ஓதப்பெற்றது. திருவிளக்கு இருபாலும் நின்று நிலவியது. சமயச் சடங்குகள் அமையச் செய்தனர்.

பறவைக்கப்பல் வழியாகத் துணையிழந்த இணையில் ஆண் மையராம் நேரு, ராஜாஜி, ராஜேந்திரப் பிரசாத், புருஷோத்தம தாஸ் தாண்டன் முதலியோர் பம்பாய் வந்து சேர்ந்தனர். அர சியல் இடங்களெல்லாம் கொடியை அரை மர அளவில் கட்டல், விடுமுறைவிட்டு மூடல், பரிவுத் தீர்மானம் செய்து அறிவித்தல் முதலிய இன்றியமையாச் செயல்கள் செய்தன. உலகத்தின் பல்வேறு பாகங்களிலிருந்து பகரொணைக் கையறுநிலைச் செய்தி கள் கம்பிவழியும், பிறவழியும் வந்து சேர்ந்தன. வானொலி நிலையங்கள் பல்வேறு மொழியில் பிரிவுச்செய்தியை இடை விடாது பரப்பின.

16-12-50 மாலை 4-30 மணிக்கு பம்பாய் பிர்லா மாளிகையி லிருந்து சோனைப்பூர் நன்காட்டுக்கு ஒரு கல் தொலைவுக்கும்

மக்கட்கடலே சூழ்ந்த ஊர்வலத்திடையே சிறப்புடன் அறப் பெருஞ் செல்வர் சர்தார் நல்லுடல் மெல்லெனக் கொண்டு வரப்பட்டது. தலைவர்களெல்லாம் இறுதியுரையும் இயம்ப வொண்ணா வண்ணம் ஏங்கி அழுதனர். அழுகையிடையே தழு தழுத்த குரலில் சிறிது பேசினர். அப்படியும் பேசமுடியவில்லை நேருஜிக்கு. தாயாபாய் கொள்ளியிடப் பிறரெல்லாம் நெய் வார்க்க எரியுண்டது எழிலுடலே. பரிவுண்டது உலகே! செறி வுண்டது இருளே! இவ்விடமே முன் வித்தல்பாய் படேலுக்கும இடமாயது.

எழிற்றிருவேணி என்புக்கிடம்

29-12-50 வெள்ளிக்கிழமை பொன்னே மணியே பொரு வும் அவர்தம் என்பு தனி வானவூர்திவழி டில்லிக்குக்கொண்டு வரப்பட்டுப் படகுகள வழிப் பல்லாயிரக்கணக்கான மக்கள், குடியாட்சித் தலைவர், அமைச்சர் உள்ளிட்டார் சூழத் திரு வேணிக் கலப்பில் கலக்கச் செய்தனர். அக்காட்சியும சிறப் பும் சர்தாரின் ஆட்சியும் மாண்பும் ஆண்மையும் புலப்படுத்தும் அறிகுறிகள். நாம் சர்தார்க்குச் செய்யவேண்டிய மாறுக்கடமை அவர் அடிச்சுவடு பற்றிக் கட்டுப்பாடும், ஒற்றுமையும், கலங்கா ஆண்மையும், தன்னலமின்மையும், நாட்டு நலமே நமதுயிர் என நாடலும், உலக அரங்கில் உயர்வற உயர்ந்தது நம்நாடே எனப் பெயர் நாட்டிக் கூட்டொருவனை வேண்டாக் கொற்றத் தினராய் வாழ்வதே. சர்தார் வல்லபபாய் படேல் நல்லாவி நமக்கு ஊக்கந் தந்து பேரா இயற்கை பெற்றுப் பெரிதும் வாழ்க.

திரு. புகழ். முத்துசுவாமிப் பிள்ளை

தென்றலும் பொருநையும் நின்றுலவும் தமிழ்த்தேர் நெல்லை மாவட்டத்து, திருச்செந்தூர்க் கூற்றத்து உடன்குடி என்றூர் ஊர் உளது. அவ்வூர் நிலவேளாண் மக்களாய்ப் நிலவியவர் சிவ. புகழும் பெருமாள் பிள்ளையவர்கள் ஆவர் இவர்கள் வாழ்க்கைத் துணைவியார் சுப்பம்மையாராவர். பிள்ளையவர்கள் பெரு மனிகைத் தொழில் நடத்தி நெறி முறை தவறாது வாழ்க்கை நடத்தினர். தவப்பேற்றால் இவர்கட்கு ஆண்மக்கள் ஐவரும் பெண்மக்கள் ஐவரும பெரும் பேறுப்க் கிட்டினர்.

இப்பதின்மருள் தலைப்பிள்ளை குழ வாழ்நாளாய்க் கழிந்தது. ஏனை ஒன்ப தின்மரும் கற்றறி வல்லராய் நற்றிறம் படர்ந்து மணமுற்று மக்கட்பெற்று மக்கட்கும் மக்கள்கண்டு வாழ்ந்தனர். இவர்களுள் ஒருவரே நம் **முத்துசுவாமிப் பிள்ளை** யவர்களாவர். இவர்கள் 1890 ஆகஸ்டு 16 சனிக்கிழமை நற் பொழுதில் தோன்றினர்கள். உள்ளூர்க்கல்வி ஊக்கமுடன் கற்றார்கள். பன்னிரண்டு பதின்மூன்றாண்டு இளமையிலேயே செந்தமிழ் மொழியைத் திறம்பெறக் கற்கத் திருத்தில்லை சென்றனர். அங்ஙனம் செல்வதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் இவர்களின் முதல் தமையனார் சிவராமகிருட்டின பிள்ளையவர்களாவர். தில்லையில் **நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில்** நான்காண்டுகள் தமிழ் கற்றுத்தேறி வல்லராயினர். உடன்கற்ற மாணவர் பல்லோருள்ளும் தலைசிறந்த நண்பர் வேலூர் ஊரிஸ் கல்லூரித் தமிழாசிரியராய்த் திகழும் திரு. இராசாப்பிள்ளையவர்கள். பிள்ளையவர்கள் சேர் தமையனார் பு. சண்முகம் பிள்ளையவர்கள் பி. ஏ. பட்டமும், சட்டப்பட்டமும் பெற்று திருவைகுண்டத்தில் வழக்கறிஞராய்த் திகழ்ந்தனர்.

இவர்கள் தந்தையார் நடத்திய மனிகையை நடத்தித் தமிழ்த்தொண்டும் சிவத்தொண்டும் புரிந்து வந்தனர். தில்லையில் கற்கும்பொழுதே மறைமலையடிகள் நட்பு வாய்த்தது. இளமைப் பருவத்தே கிட்டத்தட்ட மூந்நூறு கல் தொலைவிலிருந்து தமிழ் கற்க வந்திருக்கும் சால்பு அடிகள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அந்நட்பின் திண்மையால் அடிகள் தென்

பால் முதன் முதல் இவர்கள் விருந்தினராகவே குடும்பத்துடன் வந்தனர். இவர்கட்குத் தாய்மாமன் மகளையே மணஞ்செய்விக்கப்பெற்றது. இவர்களுக்கும் மக்கள் ஆண்பால் மூவரும் பெண்பால் மூவரும் ஆவர்.

தமிழ்த்தொண்டு

செந்தமிழ்ச் செல்வியில் பல கட்டுரைகள் அவ்வப்போது எழுதியுள்ளார்கள் பாலையங்கோட்டை சைவசபைச்சார்பில் நடந்த பல கூட்டங்களிலும் ஆண்டு விழாக்களிலும் அரிய பெரிய பொருள்கள்பற்றி விரிவுரையாற்றியுள்ளார்கள். ஒழுக்க விளக்கம், செல்வக்கணபதி இரட்டைமணிமாலை முதலிய நூல்கள், அற்புதத் தேவாரம், திருச்சதக உரைகள் இயற்றியுள்ளார்கள். பல வேறு கழகங்களில் பயன்பெறும் சொற்பொழிவு பல ஆற்றியுள்ளார்கள். தலைசிறந்த புலவர்கள் தமிழ்ப் பெரும் செல்வர்கள் பலர் நட்பும் நன்மதிப்பும் பெற்றுள்ளார்கள். உறவினரும் வணிகச் செல்வரும் ஆய திரு. ச. க. ஆ. பரமசிவன் பிள்ளையவர்களை உளங்கொளத் தூண்டி உடன்குடியில் நன்கொடை நடுநிலைப்பள்ளி ஒன்று நாட்டிச் செவ்வனே நடந்துவர வேண்டும் வைப்புங்கூட்டி நிறுவியுள்ளார்கள். தூய தமிழ்ச்சொல் வழங்கக் கிணறு அமைப்பித்து அந்தக் கிணற்றுக்கு அறக்கிணறு எனப் பெயரிட்டு வழங்குவித்துள்ளார்கள

ஓய்வுள்ள வேளைகளில் முதியர்க்கும் இளைஞர்க்கும் முயன்று கல்வி புகட்டியுள்ளார்கள். 1937-இல் இலங்கை சர். டி. பொன்னம்பல அருணாசலத்தாரின் பெயர்த்தி மங்களேச்சுவரி அம்மையாருக்கு நற்றமிழ் கற்பித்துள்ளார்கள். பொதுநலத் தொண்டிலும் பல ஆண்டுகள் கூட்டுறவுச் சங்கத் தலைவராய்ப் பணிபுரிந்துள்ளார்கள். விபுலானந்த அடிகளின் கழுதகு நண்பரும் ஆவர்.

அருட்பேறு

நீங்கா நோயுற்று மணிமந்திர மருந்துகளால் நீங்காமல் வள்ளி மணாளன் கனவில் அருளிய கட்டளைப்படி செந்தமிழ்ப் பாப் பாடி அந்நோய் தீரப் பெற்ற தீந்தமிழ்ச் செல்வர். 1950 திசம்பர் 17 ஞாயிறு காலை 7 மணிக்கு 'அம்மை அப்பர்' திருவடி நினைவுடன் ஆவி பிரிந்தது; ஆண்டவன் அடியிணை பொருந்தினர்.

புகழ்மூத்தச் சாமிப் புலவர்புகழ் என்றும்
திகழ்க தமிழ்சிவத்தால் சேர்ந்து.

தேவாரப் பண் ஆராய்ச்சி

[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்]

சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தின் சார்பில் தேவாரப் பண் ஆராய்ச்சிக் கூட்டம், இரண்டாவது முறையாக 27-12-50 முதல் 29-12-50 வரை மூன்று நாட்கள் சி. எல். எஸ். மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்றது. திருப்புகழ்மணி, திரு. டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார். பேராசிரியர் திரு. பி சாம்பமூர்த்தி தலைமையேற்றார்.

தமிழ் இசைச் சங்கத்தலைவர் டாக்டர், திரு. ரா. க. சண்முகஞ் செட்டியார் தமது வரவேற்புரையில் அடுத்த ஆண்டில் திருவாசக ஆராய்ச்சியும் எடுத்துக்கொள்ளப்படுமென அறிவித்தார். இக்காலம் வழக்கத்திலிருக்கும் இராகங்களெல்லாம் தமிழ் நாட்டின் பழமையான பண்களிலிருந்துதான் தோன்றின என்ற உண்மையைப் பண் ஆராய்ச்சிக் கூட்டம் தெளிவாக்கிற்று. சென்ற ஆண்டு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, சில பண்களுக்குப் பொருத்தமான இக்கால இராகங்கள் என்ன வென்பதுபற்றி ஆராய்ச்சி மூன்று நாட்களும் சுவையாக நடைபெற்றது. தேவார ஓதுவார்களும், இசைவாணர்களும், தமிழ் அறிஞர்களும் உணர்ச்சியோடு சொற்போர் செய்தமை அன்பர்களின் உள்ளத்திற் கிளர்ச்சி யூட்டிற்று. கீழ்க்கண்ட பண்களுக்கு ஏற்ற இராகம் இதுவென்பது பின்வருமாறு முடிவாயிற்று :—

பண்	பொருத்தமான இராகம்
பழம்பஞ்சுரம்	—சங்கராபரணம்.
சாதாரி நட்டராகம்	—பந்துவராளி. [இரண்டிற்கும் உள்ள தனித்தனி இராகம் என்னவென்பதை உட்குழு (சப்கமிட்டி) ஆராயவேண்டும்.]
புறநீர்மை	—பூபாளம். [ஓதுவார்கள் பாடுகையில் பௌளியின் சாயல் வருகிறது.]
மேகராகக் குறிஞ்சி தக்கராகம் தக்கேசி	—நீலாம்பரி. —காம்போதி. [இரண்டிற்கும் தனித் தனியே இராகம் உண்டா என்பதை உட்குழு ஆராயும்.]
பழந்தக்க ராகம்	—ஆரபி, சுத்த சாவேரி, தேவகாந்தாரி ஆகிய மூன்று இராகங்களில் பாடப்படுகின்றது. இவற்றில் எது மிகப் பொருத்தம் என்பதை உட்குழு ஆராய வேண்டும்.
காந்தாரம் பியந்தைக் காந்தாரம்	—நவரோசு இராகத்திற்குச் சரியாக இருக்கின்றன. இவற்றிற்குரிய தனியான இராகம்பற்றி உட்குழு ஆராயும்.

அந்தாளிக்குறிஞ்சி — சாமா.
திருத்தாண்டகம் } — செய்யுள் வகை. இவைபற்றி மேலும்
திருநேரிசை } ஆராய வேண்டும்.

ஆராய்ச்சிக் கூட்டத்திற் சலிப்புத்தட்டாம லிருப்பதற்காக இடையிடையே பண்களைப்பற்றிய சொற்பொழிவுகளும் நடை பெற்றன. திருவாளர்கள், டி. கே. சிதம்பரநாத முதலியார், ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு. வரதராசனர், ம. ப. பெரிய சாமித்தூரன் ஆகிய அன்பர்கள் இலக்கிய விருந்தளித்தனர்.

பேராசிரியர், திரு. பி. சாம்பமூர்த்தி தமது முடிவுரையில் மக்களுக்குழைத்துவார்களின் சம்பிரதாயத்தில் பத்தியிருக்கவேண்டு மென்று குறிப்பிட்டார். 'கல்கி' ஆசிரியர், திரு. ரா. கிருஷ்ண மூர்த்தி நன்றி கூறினர்.

செய்திகளும் குறிப்புகளும்

தாய்மொழியின் இன்றியமையாமை

டில்லி பட்டம் அளிப்பு விழாவில் ராஜன் பாபு வற்புறுத்தியதாவது: நம் நாட்டில் நாட்டுமொழிக்கு முதன்மை யில்லாமையே ஒற்றுமையின்மைக் குக் காரணம். நாட்டுமொழி விருப்பப் பாடமாகவும், ஆங்கிலம் கட்டாய பாடமாகவும் ஆக்கப்பட்டிருந்தது. ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாகப் படிப்பதால் தாய்மொழியின் கண்ணுள்ள தமக்குரிய இலக்கியங்களைக் கற்கத் தவறிவிடுகின்றனர். ஆங்கிலம் அன்றாட வாழ்க்கைக்குச் சிறிதும் பயன்படுவதில்லை. மேலும் அவர்கள் ஆங்கிலம் கல்லாதாரை இகழ்கின்ற னர். அவர்களைவிட்டு விலகி வாழ்கின்றனர். அதனால் கூடிவாழும் சிறந்த பண்பும் ஒற்றுமையும் பறந்து குலைந்து ஒழிகின்றன என்பதே.

வடவெல்லை

தமிழ் வளர்ச்சிக் கழகச் சார்பில் நடந்த மாபெருங் கூட்டம். தலைவர் திரு. கே. விநாயகம் அவர்கள். மொழிவாரி மாகாணப் பிரிவின்போது திருத்தணி, புத்தூர், சந்திரகிரி, சித்தூர், பலமனேரி, குப்பம் ஆகிய ஆறு தாலூகாக்களும் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட வேண்டுமென்னும் தீர்மானம் ஒருமனமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

'ஔவையார்' நாடகம்

திருவல்லிக்கேணி பெண்கள் பாடசாலைக் கலாமண்டபத்தில் டி. கே. எஸ். பிறப்பாளர் நடித்த 'ஔவையாரைக்' கண்ணுற்றுத் திருவாங்கூர் மன்னர், "கிழவியாகவோ இளைஞர் நடிக்கிறார் என்று தெரியவே யில்லையே; அவ்வளவு அருமையாக இருந்தது," என்று தமிழில் மொழிந்தனர்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2/140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.